# தினக்கதிர்

வார வெளியீடு

THINAKKATHIR WEEKLY — දිනක්කතිර්

இதழ்- 02 & 03 | ஜன 11 - 17, 1998 | விலை - ரூ 10



பொங்கல் வாழ்த்துக்கள்

RBC

பாடசாலை உபகரணங்கள்

பரிசுப் பொருட்களுக்கு

நாடவேண்டிய ஒரேஸ்தாபனம்

ராஜாஸ் புத்தக நிலையம்

111.பிரதான வீதி

மட்டக்களப்பு

T.P: 065-22371


வாசகநேயர்களுக்கு எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



## பகிஸ்கரிக்க மக்கள் முடிவு

## வாக்களிக்க படையினர் தூண்டலாம்

(யாழ். நகரிலிருந்து கதிரவன்)

யாழ் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காததன் மூலம் அரச ஊழியர்களும், இடம் பெயர்ந்து வெளி மாவட்டங்களில் வாழ்பவர்களும் தேர்தலுக்கு தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

மொத்த வாக்காளர்களில் ஐம்பது வீதமானவர்கள் இடம் பெயர்ந்து வெளி மாவட்டங்களில் உள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் தற்போது தங்கியுள்ள மக்களில் 25 வீதமானவர்களாவது வாக்களிப்பார்களா என்பது சந்தேகம் எனஅரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களை வாக்களிக்கத் தூண்டலாம் என சொல்லப் படுகிறது.

யாழ் குடா நாட்டில் உள்ள அரச ஊழியாகள் வெறும தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காததுடன் தேர்தல் கடமைகளுக்கும செல்ல மறுத்து வருவதாக தொரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கடமைகளுக்காக வெளிமாவட்டங்களில் இருந்தே ஊழியர்கள் அழைத்துச் செல்லப படுவாாகள்.

எதிர்வரும் இருபதாம் திகதி தொடக்கம் யாழ் குடாநாட்டுக்கான விமானச் சேவையில் பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். தேர்தல் கடமைக்குச் செல்லும் ஊழியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**தேர்தல்கூத்து**

தோதல கடமைகளுக்காக அங்கு மேலதிகமாக 6000 பொலிசார் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.


தொடர்ச்சி 15ம் பக்கம்....


## வவுனியா நகரப் பாதுகாப்புக்கு சவால்

## சப் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொலை

வவுனியா நகரில் கடந்த 7ம் திகதி வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் பகுதியில் வைத்து ரயில் நிலைய கடமைக்குச் சென்ற இராணுவப் பொலிசை சேர்ந்த லயன்ஸ் கோப்பிரல் திலகரட்ணா சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவனியாநகரம் பாதுகாப்புப் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப் படுகின்ற போதிலும் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

யாழ் குடா நாட்டுக்கான தரைவழிப்பாதையைத் திறப்பதற்காக வன்னியில் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறுய் படையினர்245 நாட்களைக் கடந்தும் இலக்கை அடைய முடியாது சிக்கியுள்ளவேளையில் வவுனியா நகரப்பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ளது பாதகாப்பு தரப்பினருக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

வவுனியா நகரில் திங்கள் பகல் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார். ஓமநதையில இருநது சாமான்வாங்குவதற்காக வவுனியா நகருக்கு வந்த பத்மகுமாரஎன்றபொலீஸ் சப இனஸ பெகடரே சுட்டுக்கொல்லப்பட்டவராவர்.

விடுதலைப்புலிகளின் பிஸ்டல்குழுவினரேஇவரைச் சுடடதாகபாதுகாபபு வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

## யாழ் தீவுப்பகுதி நீதியான தேர்தலாக இருக்காது

யாழ் தீவுப்பகுதித் தேர்தல் நீதியான ஜனநாயகமான தேர்தலாக இருக்காது என யாழ் உளளூராட்சி தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர். எல். எவ் தெரிவித்திருக்கிறது.

அக்கட்சியின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இராணுவதுறைப்படையினர் எவ்வாறு தேர்தலில் போட்டியிட முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இன்றுவரை ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாழ் மாவட்டத்திலுள்ள தீவுப்பகுதிக


தொடர்ச்சி 15ம் பக்கம்....


## படுவான்கரையை நோக்கி இராணுவ நடவடிக்கை

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் விரைவில் இராணுவ் நடவடிக்கை மேற் கொள்ளப் படலாம் என நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மேற்கு பிரதேசங்களான வவுணதீவு, வெல்லாவெளி, பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

கிழக்கு மாகாண அறுவடை காலத்திற்கு முன்னர் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகலாம் என தெரிகிறது.

இதன் பரீட்சார்த்த நடவடிக்கையாக கடந்த வாரம் ஈச்சந்தீவு வரை இராணுவத் துணைப்படையினர் சென்று திரும்பினர்.

அதே வேளை அதிரடிப் படையினர் மண்டூரிலிருந்து வெல்லாவெளி கோவில் போரதீவு வரை சென்று திரும்பியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் மார்ச் மாதத்துடன் முடிவடைகின்றது.

வவுணதீவு. பட்டிப்பளை. வெல்லாவளி, வாகரை பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

தேர்தலை நடாத்துவதாக இருந்தால் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டும் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.


## மட்டக்களப்பு கறுப்புச் சந்தையில் எரிபொருள்

மட்டக்களப்பு பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் டீசல் விநியோகங்கள் நிறுத்தப்பட்டதையடுத்து கறுப்புச் சந்தையில் வியாபாரிகள் ஒரு லீற்றர் பெற்றோலை 75 ரூபாவுக்கு மேல்விற்பனை செய்து விடுகிறார்கள்

வாழைச்சேனை சுங்கான்கேணியில் எரிபொருள் வவுசர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதையடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் முடிவடைந்த போதிலும் மேறபடி நிலையங்களுக்கு அருகிலுள்ள கடைகளில் அதிக விலை கொடுத்து பெற்றோலை வாங்கவேண்டியுள்ளது

"இந்த கறுப்பு" சந்தை வியாபாரத்துக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தினரும் உடந்தையாக இருப்பதாக பாவனையாளர்கள் தொரிவிக்கிறாாகள்

தவிர்க்க முடியாத காரணங்களினால் தினக்கதிர் இரண்டாவது மூன்றாவது இதழ்கள் இணைந்து பொங்கல் சிறப்பிதழாக மலர்கிறது. தினக்கதிரின் நாலாவது இதழ் வழமைபோல் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் உங்கள் கரங்களில் தவழும். - ஆசிரியர்.




## மட்டுநகர் சுரேஸ் விவகாரம் ஐரோப்பிய தமிழர்கள் அச்சம்

உலகத்தமிழர் இயக்கத் தலைவர் சுரேஸ் மாணிக்கவாசகம் நாடுகடத்தப் பட்டால் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவார் என்று தெரிந்தும் அவரை கனடா அரசாங்கம் நாடுகடத்த முற்படுவது மனிதாபிமானமற்ற செயல் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது

சுரேஸ் மாணிக்க வாசகத்தை நாடுகடத்த கனடா எடுத்த தீர்மானத்தை ஐரோப்பிய நாடுகளிலுள்ள தமிழர் அமைப்புக்களும் மனித உரிமை அமைப்புக்களும் கண்டித்துள்ளன.

நாடுகடத்தல் விவகாரம் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு புளியந்தீவைப்பிறப்பிடமாகக் கொண்ட சுரேஸ் இலங்கையில் தீவிரவாத அமைப்பொன்றில் செயற்பட்டவர் என்றும் பின்னர் கனடாவுக்குச் சென்று குடியேறியவர் என்றும் தெரியவருகிறது.

சுரேஸ் நாடு கடத்தப்பட்டால் இலங்கை அரசு அவரைக் கைது செய்யலாம். அவர் கைது செய்யப்படுவதில் இருந்து தடுப்பதற்காக அவரின் உறவினர்கள் தமிழ்கட்சி ஒன்றின் உதவியை நாடியுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

தமிழ் பேசும் மக்களின் குரலாக தினக்கதிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர்
வார வெளியீடு

த.பெ.இல. 06.
16, புனித மைக்கல் வீதி,
மட்டக்களப்பு.
☎ 065-23055.


உலகின் பொதுமொழி அன்பாகும்
அதை உணர்த்துவதே தமிழ் பண்பாகும்.

## பலவீனங்கள்

**தமிழர் பிரச்சனை பற்றி ஜனாதிபதி புரிந்து கொள்ளவில்லை என தமிழ் கட்சிகள் கூறியிருக்கின்றன.**

**கடந்த மூன்றரை வருடங்களாக இந்த அரசுக்கு ஆதரவும், பலமும் வழங்கி வரும் தமிழ் கட்சிகள் தான் இதை கூறியிருக்கின்றன.**

**இனப்பிரச்சனையே இல்லை. பயங்கரவாத பிரச்சனைதான் உண்டு என கூறிவந்தவர் முன்னாள் ஜனாதிபதி விஜயதுங்கா.**

**அவரின் பாணியிலேயே இன்றைய ஜனாதிபதியும் தமிழர்களின் அடிப்படை உரிமையை மறுப்பது போல பதிலளித்திருக்கிறார்.**

**அதிகார திமிரும் அடக்கு முறை அகங்காரமும் அந்த பதிலில் தெளிவாகியிருக்கிறது.**

**எதை சொன்னாலும் தமிழ் கட்சிகள் எதிர்ப்பைக் காட்டமாட்டார்கள் என்பது அரசுக்கு தெரிந்த விடயம்.**

**இனப்பிரச்சனையை ஜனாதிபதி புரிந்து கொள்ளாவிட்டாலும் தமிழ் கட்சிகளின் பலவீனத்தை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்.**

**தான் ஆட்டுவித்தால் ஆடும் நூல் பொம்மைகளாக தமிழ் கட்சிகள் உள்ளன என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும்.**

**யாழ் குடா நாட்டில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என அரசு கட்டளையிட்ட போது அதை மறுக்கமுடியாமல் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தவர்களுக்கு அரசு சில கட்டளைகளையும் விதித்திருக்கிறது.**

**வடக்கு, கிழக்கு இணைப்பு, தமிழர் தாயக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை என்ற கோஷங்கள் எதையும் முன்வைக்கக் கூடாது.**

**துண்டு பிரசாரத்தை ஒட்டுவதாக இருந்தாலும் அரசுக்கு காட்டித்தான் ஒட்ட வேண்டும்.**

**இழந்த தமிழர் உரிமையை மீட்பதற்காக போராட்டத்தை ஆரம்பித்த முன்னாள் போராளிகள் இன்று நாவிழந்து பேச்சிழந்து எழுத்துரிமை இழந்து நிற்கிறார்கள்.**

**கறிவேப்பிலையாகவே தமிழ் கட்சிகளை அரசு பயன்படுத்தி வந்திருக்கிறது.**

**மக்களும் இவர்களை தீண்டத்தகாதவர்களாக எட்ட நின்றே பார்க்கிறார்கள்.**

**இந்நிலையில் தான் இப்போது தமிழ் கட்சிகள் தமக்குள்ளேயே மோத ஆரம்பித்திருக்கின்றன.**

**தம் இனத்தின் விடுதலைக்காக போராட வேண்டியவர்கள் இனப்பிரச்சனைக்கு எந்த வகையிலும் உதவ முடியாத உள்ளூராட்சி சபைகளுக்காக இரத்தம் சிந்த ஆரம்பித்திருக்கிறார்கள்.**

**தமிழ் கட்சிகளின் பலவீனத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி இனப்பிரச்சனை என்ற ஒன்று இந்த நாட்டில் இல்லை என அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

## வீதித் திருத்த வேலை இடை நிறுத்தம்

*(வந்தாறுமூலை நிருபர்)*

மட்/மாவட்டத்தில் பெருந்தெருக்கள் அதிகாரசபை (R.D.A)யின் மூலம் வீதிகள் புனரமைப்பு செய்யும் பணி கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வதிகார சபையினால் ஏறாவூர், இருதயபுரம்; கொடுவாமடு, கித்துள், வந்தாறுமூலை ஆகிய இடங்களில் பல வீதிகள் புனரமைக்கப்பட இருந்தன. அதற்கு தேவையான கருங்கற்கள், கிறவல் போன்றவை வீதி ஓரங்களில் பறிக்கப்பட்ட போதிலும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

## இலக்கிய கலாநிதி புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நூற்றாண்டு ஜயந்தி



*ஈழத்தவப் புதல்வர்களில் ஒருவரான மட்டக்களப்பு ஈன்றெடுத்த இலக்கிய கலாநிதி புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு ஆரம்பவிழா இவ்வாண்டு ஜனவரி 08ம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகியது.*

*1899 ஜனவரி 08ம் திகதி மண்டூர் திருப்பதியில் ஏகாம்பரம் தம்பதிகளின் புதல்வனாக பெரியதம்பிப்பிள்ளை பிறந்தார். வைதீக நெறியும், கலைமணமும் திகழும் மண்டூர் தமிழறிஞர் பலரையும் தந்துள்ள வரிசையில் அமரர் பெரியதம்பிப்பிள்ளை முன்னனியில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள்.*

*சுவாமி விபுலாநந்தரின் இலக்கிய பரம்பரையின் நேர் வாரிசுவாக இலக்கியத்திலும், இலக்கணத்திலும் புலமை பெற்றுத் திகழ்ந்த புலவர்மணி அவர்கள் 02.11.1978ல் இறைபதமடைந்த போது அவரது பிரிவுத்துயரில் தோய்ந்த முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து கலர்சார அமைச்சர் மாண்புமிகு செல்லையா. இராஜதுரை அவர்களும் பல தமிழறிஞர்களும், புலவர்மணியின் பேரன்பிற்கு பாத்திரமானவர்களும் இணைந்து 18.11.1978ல் ஓர் இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்து நடத்தினர்.*

*இக்கூட்டத்தில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் நினைவுப்பணிமன்றம் உருவாயிற்று. கடந்த 19 வருடங்களாக இப்பணிமன்றத்தை நடத்திச் சென்று சேவை செய்தோர் வரிசையில் அமரர் கலாநிதி மகாவித்துவான் கலாசூரி F.X.C. நடராசா, மட்டக்களப்பு அரச அதிபராக தற்பொழுது பணியாற்றும் திரு.அ.கி.பத்மநாதன் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவர் ம.சிவனேசராசா தமிழ்மணி இரா.நாகலிங்கம் (அன்புமணி) ஆசிரிய சிரோமணி த.செல்வநாயகம், மட்டக்களப்பு மாநகர முன்னாள் ஆணையாளர் திரு.கே. கார்த்திகேசு, கலாசூரி வெற்றிவேல் வினாயகமூர்த்தி, சி.க.பொன்னம்பலம் முதலானோரைக் குறிப்பிடல் வேண்டும். புலவர் மணியின் மூத்த புதல்வன் பெ.தருமலிங்கம் அவர்கள் அமரராகும் வரை இம்மன்றத்தின் வளர்ச்சியிலும், இலக்கியப் பணிகளிலும் நல்லூ க்கம் தந்து உழைத்துள்ளார். இம்மன்றத்தின் உறுப்பினர்கள் யாவரும் காலத்துக்குக் காலம் ஒன்றிணைந்து தம்மாலான இலக்கியப்பணிகளைச் செவ்வனே செய்து வந்துள்ளனர். இவ்வாண்டு மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் எஸ்.சண்முகம் அவர்க ளைத் தலைவராகக் கொண்டு மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.பொன்னம்பலம் அவர்கள் செயலாளராக இருந்து பணியாற்றுகின்றனர். மட்/இந்துக்கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபரும் சமூகசேவையாளருமான க.தங்கவேல் பொருளாளராக செயற்படுகின்றனர். காத்திரமான செயற்குழு வொன்று பக்கத்துணையாக இருந்து பிறந்த நூற்றாண்டு விழாவை இவ்வாண்டு சிறப்பாக நடத்த முனைந்துள்ளனர்.*

*மட்/ஆனைப்பந்தி R.K.M பெண்கள் மகாவித்தியாலய மண்டபத்தில் அன்னாரின் பிறந்த தினமான ஜனவரி 08ம் திகதி வியாழன் மு.ப.10மணிக்கு ஜயந்தி விழா நடைபெற்றது. மன்றத் தல்லவர் திரு.சி.சண்முகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி.சி.மெளனகுரு நூற்றாண்டு பேருரை நிகழ்த்தினாார்.*

*இந்த ஆரம்ப விழாவைத் தொடர்ந்து 1999 ஜனவரி 8ம் திகதி இறுதிப் பெருவிழாவிற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தமிழ் இலக்கிய விழாவாக நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடத்தப்படுகின்றன.*

*"கிழக்குத்தபால்" எனும் பத்திரிகை வெளியீட்டினூடாக பிராந்திய செய்தி ஏடொன்றைத் தொடங்கி நடத்திய அமரர் கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை பிறந்த நூற்றாண்டு விழா காலத்தையொட்டி "தினக் கதிர்" வாரப் பத்திரிகை வருவது மிகுந்த மகிழ்ச்சி யளிக்கிறது. அதற்கு எமது வாழ்த்துக்கள். இவ்வாண்டு புலவர் மணியின் ஜயந்தி வெளியீடு களுக்கு முன்னுரிமையளித்து செய்திகள் தயாரிக்க இலக்கிய அறிஞர்கள் முன்வரவேண்டும்.*

*- காசுபதி நடராசா -*

## இவ் வார பலன்
11.01.1998 தொடக்கம் 17.01.1998

**சோதிடர் வ. ஆறுமுகம்**

### மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம். இவைகளில் பிறந்தவர்களுக்கு.

இவ்வாரத்தில் தொழில் சம்பந்தமான முன்னேற்றங்கள் காணப்படும். வீண் சண்டைகள் ஏற்படலாம். குடும்பத்தில் மனத் திருப்திகள் குறைகள் காணப்படும்.

### ரிஷபம்

ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகினி மிருகசீரிடம் 1,2ம் பாதம் இவைகளில் பிறந்தவர்களுக்கு -

வீண்பிரயாணங்கள் அலைச்சல், பிரயாணத்தில் சிறு காயங்கள் ஏற்படலாம்.

### மிதுனம்

மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு

தொழிலில் முன்னேற்றங்கள் காணப்படும். பொருள் வருவாய் காட்டும். சம்பந்தமில்லாத பொறுப்புக்களை ஏற்க வேண்டி வரும்.

### கற்கடகம்

புநர்பூசம் 4ம், பூசம் ஆயிலியம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு

வீட்டில் சிறுசிறு பிரச்சனைகளால் வீண் அலைச்சல்கள் ஏற்படும். பிரயாணங்களால் தடங்கல்கள், இடையூறுகள் என்பன காட்டும்.

### சிங்கம்

மகம், பூசம், உத்தரம் 1ம் பாதம் இவைகளில் பிறந்தவர்களுக்கு

தொழில் துறைகளில் முன்னேற்றங்கள். அல்லது செய் தொழிலில் நிரந்தரம், வருவாய் அதிகரிப்பு, மனப்பயம் என்பன காட்டும்.

### கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ம் பாதம் இவைகளில் பிறந்தவர்களுக்கு -

வீண்பகைகள், அலைச்சல், பணவரவு என்பன காட்டும்.

### துலாம்

சித்திரை, 3,4ம் பாதம் விசாகம் 1,2,3. இவைகளில் பிறந்தவர்களுக்கு

பொருளாதார நிலை நன்றாக இருக்கும். செலவுகள் கட்டுக்கடங்கியிருக்கும். உடல் நலம் நன்றாக இருக்கும்.

### விருச்சிகம்

விசாகம் 4ம், அனுஷம், கேட்டை. பொருட்செலவு, சூடுசம்பந்தமானநோய் மனக்கவலை என்பன காட்டும்.

### தனு

பூராடம், உத்தராடம் 1ம் பாதம் இவைகளில் பிறந்தவர்களுக்கு

பணம் சம்பந்தமான நெருக்கடி, வீண்செலவு, காரியத் தடங்கல், பெண்களால் இன்னல்கள் என்பன காட்டும்.

### மகரம்

உத்தராடம்,2,3,4ம் திருகோணம், அவிட்டம் இவைகளில் பிறந்தவர்களுக்கு

காரிய சித்தி, தொழில் முன்னேற்றம், பணவருகை என்பன காட்டும்.

### கும்பம்

அவிட்டம், 2,4ம். சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதம் இவைகளில் பிறந்தவர்களுக்கு

வீண் அலைச்சல்கள், மனப்பயம், பிரயாணத்தில் இடர்பாடுகள் என்பன காட்டும்.

### மீனம்

பூரட்டாதி 4ம், உத்திரட்டாதி, ரேவதி இவைகளில் பிறந்தவர்களுக்கு

சிறு நோய், மனச்சஞ்சலம், காரியத் தடங்கல், பொருட் செலவு என்பன காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துபோன பூர்வீக கிராமத்தின் கதை

நேரடி ரிபோட்

மட்டக்களப்பு ஒரு காலத்தில் துறைமுகமாகவும் விளங்கியது. துறைமுகம் அமைந்திருந்த இடமே பெரியதுறையாகும்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் துறைமுகத்தை அண்டிய பட்டணமாக திகழ்ந்த பெரியதுறை இன்று மிகவும் பின்தங்கிய கிராமமாக காணப்படுகிறது.

இங்கு 1800ம் ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

## கதலிவனம்


. வாழைத்தோட்டங்கள் நிறைந்திருந்ததால் "கதலி வனம்" என்றும் அழைக்கப்பட்டது. இங்கு 1807ம் ஆண்டுக்கு முன்பிருந்து பாடசாலை ஒன்று இருந்ததாக வரலாற்றுக் குறிப்பு கூறுகின்றது.

திருப்பெருந்துறை மக்கள் படுவான்கரைக்கு செல்வதாக இருந்தால் மட்டக்களப்பு நகருக்கு வந்தே செல்லமுடியும்.

கொத்துக்குளம் மாரியம்மன் வீதிவழியாக அங்கு சென்ற போது நாம் கண்ட காட்சிகள் இக்கிராமத்தின் அவலங்களுக்கு சான்று பகர்ந்தன. வயல் நிலங்கள் இறால் பண்ணைகளாகமாற்றப் பட்டிருந்தன.

இறால் பண்ணையிலிருந்து வெளி யேற்றப்படும் கழிவு நீர் வாவியிலும், அருகிலுள்ள வயல்களிலுமே கலக்கின்றன. இதனால் வாவியின் சூழல் மாசடைவதுடன் அயல் பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களும் பாதிக்கப்படுகிறது.

இறால் வளர்ப்பு வேலைகள் உரிய முறையில் அனுமதி பெறப்படாமலே மேற்கொள்ளப் படுவதாக அங்குள்ள பொதுமக்கள்



தெரிவிக்கின்றனர்.

திருப்பெருந்துறை கிராமத்துக்குள் நுழைபவர்களை வரவேற்கும் மற்றொரு காட்சி அங்கு கொட்டப்படும் கழிவுகளும் அதிலிருந்து வெளியேறும் கொசுக்களும் தான். வீதியோரத்தில் கொட்டப்படும் கழிவுகளை நாய்கள் கிளறிக் கொண்டிருந்தன. அதிலிருந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது.

மட்டக்களப்பு நகரிலிருந்து எடுக்கப்படும் கழிவுகள் இங்கேயே கொட்டப்படுகிறது.

இக்கிராமத்தின் நிலை பற்றி அறிந்து கொள்வதற்காக முதலில் அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஏ.வசந்தராசாவைச் சந்தித்தோம்.

1973ம் ஆண்டிலிருந்து இங்கு வசித்து வருவதாக கூறும் இவர் சிங்களவாடியைச் சேர்ந்தவர்.

படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தின் மூலம் 1973ம் ஆண்டு இங்கு குடியேற்றப்பட்டார்.

1981ம் ஆண்டிலிருந்து கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக இருக்கிறார். இவர் இக் கிராமத்தின் தேவைகள், பிரச்சினைகள் பற்றி சொன்னார்.

இக்கிராமத்திற்கு போக்குவரத்து சேவை எதுவுமில்லை. இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள மட்டு - திருமலை பிரதான வீதிக்கு வந்தே ஏற வேண்டியிருக்கிறது.

அவசர நோயாளர்களை கூட எடுத்து செல்ல வாகன வசதியோ, போக்குவரத்து சேவையோ இல்லை.

தபாலகமும் இல்லை. முத்திரை வாங்குவதாக இருந்தால் கூட மட்டக்களப்பு நகருக்குத் தான் வர வேண்டும். 350 குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் இக்கிராமத்திற்கு ஒரு உப தபாலகம் கூட இல்லை.

இரவு வேளையில் யாருக்காவது நோய் ஏற்பட்டால் "லாம்புடன்" விமானப்படையினரின் சென்றிக்கு சென்று முறையிட்டால் சிலவேளைகளில் அவர்கள் உதவி

## பெரியதுறை

செய்வார்கள். சில வேளைகளில் உதவி கிடைக்காது. இதனால் பல மரணங்களும் நிகழ்ந்ததுண்டு.

கடந்த தேர்தல் காலத்தில் வாக்கு கேட்பதற்காக அரசியல்வாதிகள் இங்கு வந்தனர்.

தேர்தல் முடிந்த பின் எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இங்கு வரவேயில்லை. எந்த ஒரு நிதி ஒதுக்கீட்டையோ அபிவிருத்தியையோ நாம் கண்டதில்லை.

வனஇலாகா மாவடி ஓடையில் "கிரவல்" எடுப்பதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு இங்கு "கிரவல்" எடுக்கிறார்கள்.

கிரவல் எடுப்பதால் இக்கிராமத்தின் பெரும்பகுதி நீரினால் மூழ்கியுள்ளது.

இங்கு ஆறு இரால் வாடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை அனுமதி பெறாது சட்டவிரோதமாவே நடாத்தப் படுகின்றன என்றார்.

இங்கு அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் பற்றி ஒரு இளைஞர் இப்படி சொன்னார்.

"மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவியே இதற்கு பொறுப்பாக இருக்கிறார். அவர் தீர்மானித்தவர்களுக்குத்தான் வீடுகள் கிடைத்திருக்கிறது. சிலருக்கு இரு வீடுகளும் கிடைத்திருக்கின்றன. உண்மையாக வீடு இன்றிக் கஷ்டப்படுபவர்களுக்கு வீடு கிடைக்கவில்லை."

தற்போது அமைக்கப் பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் பாகுபாடு காட்டப்பட்டிருப்பதாக நாம் சந்தித்த பலரும் நொந்து கொண்டனர்.

இப்பகுதி மீனவர் ஒருவரைச் சந்தித்தோம்.

எவ்வளவு சுதந்திரமாக இரவு பகலாக இந்த ஆத்திலை மீன் பிடித்தம். இப்ப.....இந்த நாசமறுப்பானுகள் புதுபுது சட்டங்களைப் போட்டு எங்கட பிள்ளையள் கஞ்சிக்கும் வழியில்லாமல் கஷ்டப்படுகிறது. இவங்களுக்கு எங்கே விளங்கப்போகுது என பெருமூச்சு விட்டார்.

மீன் பிடிப்பதற்கு யார் தடை

## திருப்பெருந்துறை

விதிக்கிறார்கள் எனக் கேட்டேன்.

"வேற ஆர் இந்த ஏயாபோஸ்காரனும் ஆமியும் தான்"

இரவிலை ஆத்திலை இறங்க ஏலாது "காலையிலை 6 மணிக்கு ஏயாபோஸ்" சென்றிக்கு போகவேணும். சில நாளிலை பெமிசன் தருவாங்கள், சில நேரங்களிலை தரமாட்டாங்கள்.

பெமிசன் தரயில்லை என்றால் ஆத்தின கட்டின வலையிலை பட்ட மீன் நாறிப் போறதுதான். எங்கட வீட்டிலையும் அடுப்பு எரியாது. பிள்ளையளின்ர வயிறும் பற்றி எரியும். கிழமையிலை 2,3 நாளுக்குத்தான் பெமிசன் தருவாங்கள். மற்ற நாட்களிலை நாங்கள் பட்டினி தான்.

"என்ன செய்ய இந்த கொடுமை எப்ப தீரப்போகுதோ"


திருப்பெருந்துறையில் கடந்த 25 வருடங்களாக வசித்து வரும் மட்டக்களப்பு பிரதேசத்தின் இடது சாரிகளில் ஒருவரான இன்பராசாவை அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

பல விடுதலைப் போராட்ட இயக்க தோழர்களுக்கு புகழிடம் கொடுத்த பெருமை திருப்பெருந்துறைக்குண்டு என்றார் இன்பராசா.

சி.பி.டி.சில்வா தொடக்கம் பல இடது சாரி தலைவர்கள் வந்து போன சம்பவங்களை நினைவு கூர்ந்தார்.

இத்துறைமுகத்திலிருந்து தான் யாழ்ப்பாணத்திற்கும். காலிக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது. இன்று குருநாகலில் இருந்து வரும் தேங்காய் லொறியை எதிர்பார்த்து இருக்கிறோம். என்றார் இன்பராசா.

மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் ஓர் பகுதி- அதுவும் முன்னொரு காலத்தில் மட்டக்களப்பின் பட்டணமாக இருந்த இடம் இப்போது அடிப்படை வசதிகளே இன்றி அல்லல் படுவதைத்தான் காண முடிந்தது.



திருத்தலம், பாடசாலை என வளமாக திகழ்ந்த இக்கிராமத்தில் 1900ம் ஆண்டளவில் வயிற்றோட்டம் கொள்ளை நோயினால் பலர் இறந்தனர். ஏனையோர் அயல் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

1970க்கு பின்னர் சிலர் வந்து குடியேறினர். 1973ல் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தின் கீழ் சிங்கள வாடி, புளியந்தீவு பகுதியைச் சேர்ந்த 50 குடும்பம் குடியமர்த்தப்பட்டது. திருப்பெருந்துறை என பெயர் சூட்டப்பட்டது.

1970ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் சம்மாந்துறையிலிருந்து இடம் பெயர்ந்த 75 குடும்பங்களும் இக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுடன் சேர்ந்து இக்கிராமத்தில் சுமார் 325 குடும்பங்கள் வசிக்கின்றனர்.

வனம் நிறைந்த பிரதேசமாக திகழ்ந்த பெருந்துறை கிராமம் இன்று அழிவின் விழிம்பில் நிற்கிறது.

இக்கிராமத்தின் அழிவில் அபிவிருத்தி கண்ட பிரதேசங்கள் பல உண்டு. இக்கிராமத்தை அழித்து வீதிகளும், விளையாட்டு மைதானங்களும் அமைத்தவர்கள் இம் மக்களின் கண்ணீரைத் துடைக்கவேயில்லை.

திருப்பெருந்தறைக் கிராமத்தின் தேவைகள் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்தோம்.

ஏனைய இடங்களுடன் இருந்த போக்குவரத்து தொடர்பு விமான நிலைய விஸ்தரிப்பு என்ற ஆக்கிரமிப்பால் துண்டாடப்பட்டு கொத்துக்குளம் மாரியம்மன் வீதிவழியாகவே இங்கு செல்லக் கூடியதாகவுள்ளது.

படுவான்கரை, வலையிறவு, புதூர், சேத்துக்குடா பகுதிகளுக்கு செல்லும் வீதிகள் மூடப் பட்டிருக்கிறது.

விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப் பட்டு எஞ்சியிருக்கும் நிலப்பரப்பும் கிரவல் அகழ்வால் அழிந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு எடுத்த முயற்சிகளும் தோற்றுப் போன நிலையில் தம் கண்முன்னால் தம் கிராமம் அழிவதைப் பார்த்து ஏங்கிநிற்கிறார்கள்.

- உபதபாலகம், மருந்தகம், போக்குவரத்துசேவை ஏற்படுத்தப்படவேண்டும்.
- கிரவல் எடுப்பது குப்பை கொட்டுவது, இறால் வளர்ப்பது நிறுத்தப்படவேண்டும்.
- வீதிகள் புனரமைக்கப்பட்டு பெயரிடப்படவேண்டும்.
- மீன்பிடி தடை நீங்கப்படவேண்டும்.

இரா. துரைரத்தினம்




படப்பிடிப்பு
எஸ். ஜெயந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இனப்பிரச்சனையில் நீங்கள் இருக்கும் இடம் யாது?.........

*சிவில் யுத்தம் மற்றும் தீர்வு தொடர்பான தேசிய சமாதானப் பேரவையின் வினாக்கொத்து.*

இலங்கையின் இனப்பிரச்சனை பற்றிய மக்களின் கருத்துக்கள் தொடர்பாகப் பல மட்டங்களிலும் ஆராயப்பட்டு வருகின்றது. 1998 ஜனவரி 4ம் திகதி நடைபெற்ற தேசிய சமாதானப் பேராளர் மகாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் தற்போது நடைபெறும் யுத்தம் தொடர்பான தமது கருத்துக்களையும் சமாதானத்திற்கான தமது அபிலாஷைகளையும் முன்வைத்தனர். யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய தங்களின் கருத்துக்களையும் அறிய தேசிய சமாதானப் பேரவை விரும்புகின்றது. எனவே இக் கேள்விக் கொத்தை நிரப்பி எமக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

**ஒரு கேள்விக்கு ஒரு பதிலை மட்டும் குறியிடவும். மேலதிகமாக ஏதேனும் கூறவிரும்பின் கீழே குறிப்பிடவும்.**

1. ***யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமா?***

☐ (அ) இல்லை, ஏனெனில் எல்.ரீ.ரீ.ஈ. முற்றாகவே துடைத்தெறியப்பட வேண்டும்.
☐ (ஆ) இல்லை, ஏனெனில் நியாயமான தீர்வொன்றினை அடைவதற்கு முன்பதாக எல்.ரீ.ரீ.ஈ மேலும் சிறிது பலவீனப்படுத்தப்பட வேண்டும்.
☐ (இ) ஆம், எல்.ரீ.ரீ.ஈ.யை எவ்வகையிலும் முற்றாக தோல்வியடையச் செய்ய முடியாது. எனவே யுத்தம் மென்மேலும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
☐ (ஈ) ஆம், ஏனெனில் யுத்தம் தாங்கிக்கொள்ளவியலாத பொருளாதார சமூக, சுற்றாடல் மற்றும் மனித உயிர் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

2. ***யுத்தம் எவ்வாறு நிறுத்தப்பட வேண்டும்?***

☐ (அ) எல்.ரீ.ரீ.ஈயை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன் மூலமாக.
☐ (ஆ) எல்.ரீ.ரீ.ஈ யுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமாக.
☐ (இ) முதலில் எல்.ரீ.ரீ.ஈ.யை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தியதன் பின் அதனுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமாக.
☐ (ஈ) முதலில் எல்.ரீ.ரீ.ஈ.யை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தியதன் பின் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து அரசியல் தீர்வை அமுல் நடாத்துவதன் மூலமாக.

3. ***இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு யாது?***

☐ (அ) அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை (மாகாண சபைகள்) உரியவாறு அமுல் நடத்தல்.
☐ (ஆ) அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் பொதியைப் போன்ற ஓரளவு சமஷ்டி முறையொன்றை ஏற்படுத்தல்.
☐ (இ) இந்தியாவைவிட அதிகமான அதிகாரமுள்ள முழு அளவிலான சமஷ்டி முறையொன்றை ஏற்படுத்துதல்.
☐ (ஈ) தமிழ் ஈழம் எனும் வேறானதொரு தமிழ் நாட்டினை உருவாக்குதல்.

4. ***கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கருத்திற் கொண்டு பார்க்கின்றபொழுது வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவைப்படுகின்றதா?***

☐ (அ) இல்லை. ஏனெனில் இலங்கையர்கள் போதுமானளவு திறமையைக் கொண்டுள்ளனர்.
☐ (ஆ) இல்லை, ஏனெனில் இது ஒரு உள்நாட்டுப் பிரச்சனை, வெளிநாட்டு மத்தியஸ்தம் தேசிய தன்னாதிக்கத்தை இழக்கச் செய்துவிடும்.
☐ (இ) ஆம், இலங்கையின் சுயாதிபத்தியம் உத்தரவாதப் படுத்தப்படும் வகையில் வெளிநாட்டு மத்தியஸ்தம் உதவுதல் எனும் அளவிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படின் (இரு பகுதியினரும் சந்தித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் இரு சாராருக்கும் இடையில் செய்திகளை எடுத்துச் செல்லல்.)
☐ (ஈ) ஆம், ஒரு நியாயமான தீர்வைக் கொண்டு வருவதற்கு எமக்கு உதவுவதற்காகவும் இருபகுதியினரும் தமது வார்த்தைகளைக் காப்பாற்றிக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவைப்படுகின்றது.

5. ***தமிழ் மக்களுக்கு உண்மையான குறைபாடுகள் உள்ளனவா?***

☐ (அ) தமிழர்களுக்கு உரித்தான விசேடமான குறைபாடுகள் இல்லை.
☐ (ஆ) கடந்தகாலத்தில் தமிழர்களுக்கு ஏதாவது குறைபாடுகள் இருந்திருப்பின் அவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.
☐ (இ) இடம் பெயர்வு மற்றும் கெடுபிடிகள் போன்ற தமிழர்களுக்கெதிரான குறைபாடுகள் யுத்தம் காரணமாகவே ஏற்பட்டுள்ளன.
☐ (ஈ) யுத்தம் முடிவடைந்தாலும் கூட தீர்க்கப்பட வேண்டிய உண்மையான பல்வேறு குறைபாடுகள் தமிழர்களுக்கு உண்டு

6. ***யுத்தத்தையும் இனமுரண்பாட்டையும் முடிவுறுத்தும் விடயத்தில் சாதாரண குடிமக்கள் பங்களிப்புச் செய்யவியலுமா?***

☐ (அ) இயலாது, ஏனெனில் இப்பிரச்சனைகள் அரசியல்வாதிகளினாலும் அரசாங்கத்தினாலும் உருவாக்கப்பட்டவைகளாகும்.
☐ (ஆ) இயலாது, ஏனெனில் யுத்தமானது எல்.ரீ.ரீ.ஈ.யினால் மேற்கொள்ளப்படுகின்றது.
☐ (இ) ஆம், தமது சிந்தனையிலும் இனவாதிகளாகச் செயற்படுவதை நிறுத்துவது அவர்களின் கடமையாகவுள்ளது என்பதாகும்.
☐ (ஈ) ஆம், மக்கள் அமைப்பாகி சமாதானத்திற்காகச் செயற்பட விரும்புவார்களாயின் யுத்தத்தை நிறுத்துமாறு மேலிடத்தில் இருப்பவர்களை வலியுறுத்திக் கேட்கவியலும்.

இவ்வினாக்கொத்து அநாமதேயமானது. எனவே இதனை நிரப்புபவர்கள் தமது பெயர்களைக் குறிப்பிட வேண்டுவதில்லை. எனினும் புள்ளி விபரங்களைச் சேகரிப்பதற்காக கீழ்காணும் விபரங்களைத் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

உங்கள் வயது : ..............................

பால் : ☐ ஆண் ☐ பெண்

இனம் : ..............................

சமயம் : ..............................

தொழில் : ..............................

பிரதேசம் : ..............................

*உங்கள் பதில்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:*

இணைப்பாளர் (வினாக்கொத்து)
தேசிய சமாதானப் பேரவை
291/50, ஹவ்லொக் கார்டன்ஸ்
கொழும்பு - 6

இது பொதுமக்களின் கருத்துக்களை ஆராய்வதற்கான ஒரு சுதந்திரமான கணிப்பீடாகும். இதன் முடிவுகள் பொதுமக்களின் அறிதலுக்காக வெளியிடப்படும்.

## இதயத்தில் இருந்து...

தினக்கதிர் நம்பிக்கை தந்துள்ளது. இதனை அடிப்படையாக வைத்து தொடர்ந்து வர முயற்சிக்கவும். பிரபல்யங்களை(?) நம்பி பத்திரிகை நடாத்த முடியாது. காலில் வீழ்ந்து ஆக்கங்களைப் பெற்று சஞ்சிகையோ, பத்திரிகையோ நடாத்தும் துர்ப்பாக்கியத்திலே நாமுள்ளோம் என்பது வேதனை தருகிறது. புதியவர்களை இனம் காணுங்கள். களம் கொடுங்கள். ஒவ்வொரு விடயத்துக்கும் தலைப்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் நிர்ப்பந்தமில்லை.
"டீன் ஏஜ் ஸ்பெஷல், சினிமா உலகம்" தேவையில்லைப்போல் எனக்குப்படுகிறது.

வெ.மனோ

"தினக்கதிர்" படித்தேன். மிக்க மகிழ்ச்சி. மட்டக்களப்பில் அடிக்கடி பத்திரிகைகள் வெளிவந்து மறைந்து போகின்றன. அக்கதி தினக்கதிருக்கும் வந்து விடக் கூடாதென்பதே எனது பேரவா. சிறந்த ஆக்கங்களை வெளியிடுவதுடன், பக்கம் சாராது நடுநிலை நின்று, பலரது பாராட்டையும் பெற்று காலத்தால் அழியாது நின்று சேவை புரிய வேண்டும்.

இ.இராசதுரை
கல்லடிஉப்போடை

உனது முதல் வெளியீடே அசத் தல் தான். நீ கொண்டு வரும் அம்சங்கள் அனைத்துமே தரமானவை தான். குறிப்பாக பெண்களுக் கான புதிய அலைகள், அரசியல் அலசல்கள் என்பன உனது பணி யின் வெற்றிப்படிகளாய் உள்ளன.
உனது பணி மேலும் புதுப் பொலிவுடன் திகழ வாழ்த்து கின்றேன்.

V.P வினித்தா
அமிர்தகழி

மட்டுநகரிலிருந்து தினக்கதிர் வாரப்பத்திரிகை வெளிவருவது பாராட்டுக்குரியது. தினக்கதிர் தினசரிப்பத்திரிகையாக வெளிவர வேண்டும் என்பதே எனது அவா. மட்டுநகர் மக்களின் பிரச்சினை களை மட்டுமல்ல தமிழ் பேசும் அனைத்து மக்களின் குரலாக வெளிவர வேண்டும்.

நாட்டின் உண்மையான நிலையை எடுத்துக்காட்டுவதுடன் கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற ஆக்க இலக்கியங் களுக்கும் உரிய இடம் அளிக்க ப்படவேண்டும்.

ஏ.பிரதீபன்
சேற்றுக்குடா,

தங்களது பத்திரிகை முதலாவது இதழ் வாசித்தேன். அதில் பல முக்கியவிடயங்கள் கண்டு மகிழ்ந்தேன். எமது பிரதேசத்துக்கு (தேனகத்துக்கு) என சொந்தப் பத்திரிகை ஒன்று பல முக்கிய அம்சங்களுடன் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சிய டைகிறேன்.

க.இளந்திரையன்
பெரியகல்லாறு

தினக்கதிர் பார்த்தேன், சிறுகதை, கவிதை அற்புதம். புதிய அலை கள் பெண்கள் பகுதியில் அதிக ஆக்கங்களை சேர்த்துக் கொள்ளு ங்கள். மாறாதவடு, மனதை உருக்கியது.
வாரப்பத்திரிகைக்குரிய மேலும் பல ஆக்கங்களை சேர்த்துக் கொள்ளு ங்கள்.

எம்.வேணுஜா,
புதூர்.


தினக்கதிர் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கும் நான் தங்களுக்கு அறியத்தரும் ஒரு விடயம் என்னவெனின்.

நான் மட்டுநகரில் பல இடங்களில் தினக்கதிர் பற்றி எமது நேயர்களிடம்(வாசகர்களிடம்) ஆலோசித்த போது அவர்களின் கருத்து கூடுதலாக சிறப்பாக அமைந்தது. அதே வேளை எல்லோரும் தினக்கதிரின் விலை அதிகம் என்று தான் கூறுகிறார்கள்.

கரவெட்டி சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு ஆண்டுகளைக் கடந்த அகதிமுகாம் வாழ்க்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான வடமுனை, ஊத்துச்சேனை, ஆண்டான்குளம், மலந்தனை பகுதி மக்கள் கடந்த 90ம் ஆண்டில் நடந்த யுத்த அனர்த்தத்தின் விளைவாக ஏழு ஆண்டுகளாக வாழைச்சேனை, பேத்தாளை, வினாயகபுர அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

வாழைச்சேனைக்கு மேற்கே உள்ள வடமுனை, ஊத்துச்சேனை, ஆண்டான்குள பகுதி மக்கள் தங்களுடைய சகல அத்தியாவசய தேவைமுதல் மருத்துவ வசதிகளுக்கும் வடமுனையில் இருந்து 5 மைல் தூரத்திலுள்ள வெலிக்கந்தை பகுதிக்கே செல்லவேண்டியிருந்தது.

14.06.90 அன்று வெலிக்கந்தை சந்தைக்கு சாமான் வேண் டச் சென்ற நான்கு பேர் கடத் தப்பட்டது இப்பகுதி மக்களுக்கு முதல் அச்சத்தை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து 91ம் ஆண்டு முற்பகுதியில் குணரூபராணி போஸ்ட்மாஸ்டர் உட்பட ஏழுபேர் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். அதே வேளை மீண்டும் தங்கராசா, சந்திரன், சுப்பிரமணியம் ஆகியோர் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டனர்.

இந்த சம்பவங்களை வெளிக் கொண்டுவர எத்தனித்த வீரசிங்கம் என்ற ஊர்ப்பிரமுகர் ஒருவர் ஊத்துச்சேனை மாரியம்மன் கோயிலடியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

02.08.91அன்று ஒரு பாரிய தாக்குதல் ஒன்று இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து சீருடை அணிந்த ஆயுதம் தரித்தவர்களும், சீருடையணியாத ஆயுதம் தரித்தவர்களுமாக இப்பகுதிக்கு வந்து வீடுகளை எரித்தனர்.

இதனால் இரவோடு இரவாக காட்டுப்பாதையினூடாக வாழைச்சேனைக்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் ஆரம்பத்தில் பேத்தாளை, புதுக்குடியிருப்பு, கருணையபுரம் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலுமே குடியமர்த்தப்பட்டனர்.

09.08.92 மயிலந்தனையில் சிவில் உடைதரித்த ஆயுததாரிகளினால் செய்யப்பட்ட 35 படுகொலையைத் தொடர்ந்து இப்பகுதி மக்களும் இங்குவந்து சேர்ந்தனர்.


92ம் ஆண்டு 10ம் மாதமளவில் கொட்டில்கள் அமைத்து பேத்தாளையில் 465 குடும்பங்கள் குடியமர்த்தப்பட் டனர். ஏழைகள் தலையில் தான் இடிவிழுவது போல் இந்த அகதிமுகாமில் கடந்த 14.02.97 அன்று தீப்படித்தது. இதில் 12 பெரிய கொட்டில்களும் 48 சிறிய கொட்டில்களும் சேதமடைந்தது.

இதனையடுத்து வினாயகபுரம் கல்மடு பகுதியில் தனியார் காணி ஒன்றில் கொட்டில் அமைத்து 301 குடும்பம் அங்கு குடியமர்த்தப்பட்டது.. அதனை விட இங்குள்ளவர்கள் கிரான், மாவடிவேம்பு, வினாயகபுரம் பகுதிகளில் தமது உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்.

பேத்தாளை அகதிமுகாமைச் சேர்ந்த நடராசா (25) என்பவரைச் சந்தித்து இங்குள்ள நிலமைகள் பற்றிக் கேட்டபோது நாங்கள் இங்கு வந்து 7 வருடமாகிவிட்டது. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறிமிதிப்பது போல் இருக்கின்றது எங்களது வாழ்வு.

நாங்கள் என்ன காரணத்துக்காக எங்களது சொத்துக்களையும், உடமைகளையும் விட்டு இங்கு வந்து அகதிகளாக இருக்கின்றோமோ அதைவிட இங்குள்ள நிலமைகள் மோசமாக இருக்கின்றது. தினமும் பயந்த ஜீவியமே நடத்த வேண்டியிருக்கின்றது. எப்போதும், எந்நேரத்திலும் எறிகணைகளும், துப்பாக்கி ரவைகளும் எங்களைத் தேடிவரலாம். அதை எதிர்பார்த்தே இருக்க வேண்டிய நிலையிருக்கின்றது.

இதுவரைக்கும் எங்களது முகாம்களில் உள்ளவர்களில் துப்பாக்கிச் சூட்டுக்கும், ஏறிகணைக்கும் இலக்காகி 4 பேர் இறந்துள்ளார்கள். 30 பேர் வரை காயங்களுக்குள்ளாகியிருக்கின்றார்கள் அண்மையில் படையினரின் துப்பாக்கிக் குண்டு எமது முகாமிலுள்ள ஒரு கர்ப்பிணி பெண்ணின் வயிற்றில் பட்டது. இதனால் அவரின் குழந்தை இறக்கவும் நேரிட்டது எனவும் கூறினார்.



கல்மடு அகதிமுகாமைச் சேர்ந்த இராஜேஸ்வரி (30) என்றவரை கேட்டபோது இன்றைய நிலையில்இங்கு வாழ்கின்ற வாழ்க்கை ஒரு சிறை வாழ்க்கை. எங்களது பிள்ளைகள் வெளியில் செல்ல முடியாத நிலையிருக்கின்றது. இத்னால் எந்த ஒரு தொழிலையும் செய்யக்கூடிய நிலையில்லை.

இதேவேளை இன்று நாங்கள் இருக்கின்ற நிலம்கூட ஒரு தனியாருடையது. இது தாழ்ந்த பகுதியைச் சேர்ந்ததால். மழைகாலத்தில் எங்களுடைய கொட்டில்கள் எல்லாம் தணணீருக்குள் மிதக்கின்றது.


இங்கு இருக்கின்ற குடும்பங்கள் அனேகமானவர்கள் ஐந்து பேருக்கு மேற்பட்டவர்களாகத்தான் இருக்கின்றோம். இங்கு அரசாங்கத்தில் தரப்படும் நிவாரணம் ஐந்துபேருக்கும் அதே நிவாரணந்தான். அதற்கு மேற்பட்டவருக்கும் அதே தொகைதான் தரப்படுகின்றது. இத்தொகை எங்களுக்கு போதுமான தொன்றல்ல.

இன்று வாழ்க்கைச் செலவும் அதிகமாக இருக்கின்றதனால் இந்த 1260 ரூபாவையும் எங்களது சொந்த இடத்தில் வைத்து தந்தார்களானால் எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் இருக்கும் எனவும் கூறினார்.

கா.குணசீலன் கூறுகையில் நாங்கள் அனைவரும் எங்களது சொந்த இடங்களுக்கு செல்வதைத்தான் விரும்புகின்றோம். எங்களுக்கு தகுந்த பாதுகாப்பை தந்து குடியமர்த்தும் பட்சத்தில் மீண்டும் நாங்கள் எங்களுடைய இடங்களுக்கு செல்லத்தயாராக இருக்கின்றோம்.

வடமுனைக்கு மேலுள்ள கல்லிச்சைக் கிராம முஸ்லீம் மக்கள் எங்களோடு தான் இடம் பெயர்ந்தார்கள். அவர்களுக்கு றிதிதனையில் காணி வழங்கபபட்டு மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். இப்போதாவது எங்களை வேறொரு இடத்திலாவது குடியமர்த்துவதற்கு சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## வீரமுனையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள்



இ.நவதினம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வீரமுனையில் ஜனவரி 4ந் திகதி இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

திருவெம்பாபூசைக்கு செல்வதற்காக இருந்த வேளையிலேயே இரவு 3.15 மணியளவில் வீட்டிற்குள் புகுந்த ஆயுத தாரிகள் இருவரையும் வெளியே அழைத்து வந்து சுட்டுக்கொன்றதாக இறந்த இளைஞர் ஒருவரின் தந்தை இராசையா தெரிவித்தார்.

நவதினம்- (16வயது), நித்தியானந்தன்- (24வயது) இருவரும் உடன் பிறவாச் சகோதரர்கள. இவர்களை சுட்டுக்கொன்றவர்கள் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள என இராசையா தெரிவித்திருக்கிறார்.

இச்சம்பவத்திற்கு முன்னர் இரவு 9.30 மணியளவில் சம்மாந்துறை வீரமுனை எல்லையிலுள்ள பள்ளிவாசலுக்கு அருகே ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தையடுத்து துப்பாக்கி வேட்டுக்கள் இரவு முழுவதும் கேட்டவண்ணம் இருந்தன. இதனால் அதிகாலை திருவெம்பா பூசைக்கும் எவரும் செல்லவில்லை.

ஊர்காவல் படைவீரர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நோக்கில் சிலர் பொதுமக்களின் வருகைக்காக காத்திருந்ததாகவும் இவர்களே வீட்டில் புகுந்து இரு இளைஞர்களையும் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

"புலிகள் தான் இவர்களை சுட்டாங்கள்" என்று கட்டுக் கதை ஒன்றையும் கொலையாளிகள் பரப்பினர்.

இராசையா நவரத்தினம் வீரமுனை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் 9 ஆண்டில் கல்வி கற்பவர்.



ம.நித்தியானந்தன்

முத்தம்பி நித்தியானந்தன் க.பொ.த.சாதாரணதரம் வரை கற்று விட்டு கூலி தொழில் செய்பவர்.

இக்கொலையில் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் ஊர்காவல் படையைச் சேர்ந்த 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வியாழன் நண்பகல் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை. இதனையடுத்து 7 சந்தேக நபர்களும் விடுதலை செய்யப் பட்டனர்.





தென்கிழக்கு ஆய்வுமையம் நாட்டின் நான்கு முதுநிலைப் பத்திரிகையாளர்களை கௌரவித்துப் பாராட்டியது. கல்முனை ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவரும் பிரபல பத்திரிகையாளருமான ஏ.எல்.எம்.சலீம் மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகத்திற்கு பொன்னாடை போர்த்துவதையும் தபால் தந்தி தொடர்பு வெகுசனத் தொடர்புகள் பிரதி அமைச்சர். எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விருது வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பிதழ்




## நன்றி கூறும் தமிழர் விழா

தைப்பொங்கல் திருநாள் என்பது தமிழ் மக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

சூரியனுக்கு நன்றி கூறும் பெருவிழாவாக தைப் பொங்கல் அமைகிறது. உலகில் உயிர்கள் தோன்றவும் அவை வளர்ச்சி அடையவும் சூரியனே இன்றியமையாதவனாகிறான். இயற்கை வழிபாடு மிக மிகத் தொன்மையானது. இவ் வழிபாடு பற்றி இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்து மதத்தில் சூரிய வழிபாட்டிற்கு "சௌரம்" என்று பெயர் இவ்வாறாக ஆதவனை நினைவு கூர்ந்து வழிபடும் ஒரு விழாவே தைப்பொங்கல் பண்டிகையாகும்.

தைமாதம் முதலாம் திகதி என்பது சூரியன் தனுராசியில் இருந்து மகர ராசிக்குப் பிரவேசிக்கும் தினமாகும். அத்தோடு சூரியன் தைமாதம் தொடக்கம் ஆனி வரைக்கும் வடக்கு நோக்கிச் செல்வது உத்தராயணம் என்றும் ஆடி முதல் மார்கழி வரை தெற்கு நோக்கிச் செல்வது தட்சிணாயனம் என்றும் சோதிட நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

அன்றைய தினமே தைப்பொங்கல் தினமாகும். "ஆடி விதை தேடி விதை" என்னும் முதுமொழிக்கமைய ஆடி மாதத்தில் மழை நீரை நம்பி வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் அதில் முதல் முதல் அறுவடையாகும் நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியை இந்த தை முதல் நாளில் பொங்கல் இட்டு வழிபாடு செய்வதாக அமைகிறது.

ஆரம்பகாலத்தில் உழவர்களால் மட்டும் செய்யப்பட்டு வந்த இவ்விழா பிற்காலத்தில் இந்துக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் மறுநாள் பட்டிப் பொங்கல் நாளாகும். உழவுத் தொழிலுக்கு உறுதுணை புரியும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் இவை அமைகிறது.

அன்றைய தினம் தங்களது மாடுகளை நீராட்டி மாலை அணிவித்து மஞ்சல் குங்குமம் பொட்டிட்டு, பட்டியடி என்றழைக்கப்படும் மாடுகள் கட்டும் இடத்தில் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வர்.

தற்போது யுத்த சூழ்நிலைகளினால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து பல்வேறு அவலங்களுக்குள்ளும் சிக்கித் தவிக்கும் இந்த நிலையில் 98ம் ஆண்டின் தைப் பொங்கல் திருநாள் நாட்டில் சாந்தி, சமாதானம், நிம்மதி நிறைந்த திருநாளாக அமைய நாமும் பிராத்திப்போமாக.

பா.வேணுகோபால்

## மணக்கும் பொங்கல் மனங்குளிர

பொங்கலோ பொங்கல்
புதிய நெல் அரிசிப் பொங்கல்
மங்களமாய் மனைகள் எங்கும்
– நெய்
மணக்கும் தைப்பொங்கல்

வங்கக் கடல் அலை போல –
புதுப்பானை
வாய்வழிந்து பாலும் பொங்க
தங்கத் திருநாளாய்
வந்ததெங்கள் தைப்பொங்கல்

துன்பம் வந்து துவண்ட முழு
சொல்ல வொண்ணா துயரும்
பெற்று
இன்பம் என்று வரும் என்று
ஏங்கியோர்க்கும் தைப்பொங்கல்

மங்கி இருந்த வாழ்க்கை நதி
வளமாய் கங்கை ஆறாக
தங்கி செல்வம் செழித்திட
தரணி வந்தாள் தைப்பொங்கல்.

க.அன்பழகன்

## பொங்குமா பொங்கல்

செங்குருதி பாச்சி
சிவந்து கிடக்குது வானம்
எங்கு போனான்
தலைகூட எட்டிப்பாராது
எங்குதான் தொலைந்தான்கதிர்?

இருள் விலகி எப்போ?
இன்னும் துலங்காது
ஏன் கிடக்குது இந்த வீதி?
எப்படிக் கிடந்த வீதி
இன்று வெறிச்சோடி............
கலகலப்பு சிரிப்பு
எப்பயிருந்து செத்துப் போனது?

சிறு தூற்றல் மழையில்
சிறு குடையினுள் தலைபுதைத்து
கிறவல் றோட்டால்
கோடைப்பூ பறிக்க நகர்கிறேன்

சென்ற வருடம் என்னோடு
பொங்கலுக்கு கோடைப்பூ பறிக்க
வந்த சிலர்
மண்புட்டி வளர்த்து துயில்கின்றனர்

என் விழிகள் நனைகின்றன
தொண்டை விக்கி
ஒரு சொட்டு ஒப்பாரிகூட எளவில்லை
தளதளத்து தளதளத்து தவறிப்
போகிறது நா!

நண்பர்களே
அடுத்த வருடம் நானும் துயில்வேன்
மண்புட்டி வளர்த்து முட்புதர் மூடி
நீட்டி நிமிர்ந்து நிம்மதியாய் துயில்வேன்

இன்று என்ன பொங்க?
நாய்கள் கவ்விச் செல்லும்
கணைக்கால் சில்லையும்
இடுப்பு மூட்டையும்
மண்டையோட்டையுமா பொங்க?
பொங்குமா பொங்கல்?

ஆரையூர்
மலர்ச் செல்வன்

## சூரியப் பொங்கல்

பொங்கி ஓடுகின்ற
இரத்த ஆறு
விரைவில் காய்ந்து விட
எழுந்து வா சூரியனே
உனக்குப் பொங்கலிடுகின்றேன்.
அகோரக் குண்டுமழைக்கு
தப்பி ஓடுகின்ற
என் பாதங்களில்
சேற்றுப் புழுக்களாய்
பொறிவெடிகள்
யுத்த ரணங்களுக்கு
புதிய வைத்தியக் கதிர்வீச்சை
ஏந்தி வா சூரியனே
உனக்குப் பொங்கலிடுகின்றேன்.

அன்று
கடந்து விட்ட மாதங்களில்
என் இளைய கதிரை
நெற்றிக்கண்கொண்டு
பொசுக்கியது ஏன்?
இன்று
அகதி மழையில் நனைந்து
கொடுகிக் கூனுகின்றேன்
நான் விறைப்பதற்கு முன்
எழுந்துவா சூரியனே
உனக்குப் பொங்கலிடுகின்றேன்.

ஊருக்கு உதவாத
ஓராயிரம் தேர்தல்களால்
உருப்பா்சா எத்தனை
உருளப்போகின்றன

பட்டியலோடு
எழுந்துவா சூரியனே
உனக்குப் பொங்கலிடுகின்றேன்.

'கல்வியூர்க்கவிராயர்'

## வா தை மகளே

படபடக்கும் போர் வெடியில்
தலை பறக்கும் நிலை நீங்கி
சடசடக்கும் பட்டாசு வெடியுடன்
சடுதியாய் வா தை மகளே

பதுங்கி இருக்கும்
பங்கர் நிலை நீங்கி
மக்கள் இறைமையுடன் வாழ
இசைந்து வா தை மகளே

பசிக் கொடுமையால்
தறும் அகதி முகாம் நிலைநீங்கி
சொந்த இல்லத்திலேயே சேர்ந்து
வாழ
இசைந்து வா தை மகளே

வார்த்தையில் உள்ள தீர்வு
யோசனை
வடிவத்தில் மாறி
மங்காத நிம்மதியை
சுமந்து வா தை மகளே

கோ.ஜீவாகரன்

வாடிக்கையாளப் பெருமக்களுக்கும்
அன்பர்கள் ஆதரவாளர்களுக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான அலங்காரப் பொருட்களுக்கும்
கோயில் சாமான்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

SUN FANCY HOUSE
163, Trinco Road,
Batticaloa.
Tel:065 - 23092

எமது நாட்டில்
சாந்தியும் சமாதானமும் மலர
எமது பொங்கல்
வாழ்த்துக்கள்

UTHAYAA TRADING COMPANY
Wholesale Dealers in Food/ Items & Stationeries
42/1, Trinco Road, Batticaloa.
T.P.:065 - 23283

தினக்கதிருக்கு
எமது வசந்த
வாழ்த்துக்கள்

HAJI - M-ABDUL MAJEED & SUNS.
GENERAL MERCHANTS, IMPORTERS,
DISTRIBUTORS, CONTRACTOR &
CIVIL ENGINEERS.
128,130, Main Street,
Batticaloa.
T.P. 065-2836 Fax 065 - 24757

பொங்கல் வாழ்த்துக்கள்
விப்ரா ஸ்ரோர்ஸ்
பிரதானவீதி
செங்கலடி.

தினக்கதிர் வாரா வாரம் வெளிவர வாழ்த்துகின்றோம்.
❖ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு வசதிகள்,
பெக்ஸ், தெளிவானபோட்டோ பிரதிகள், லெமினேட்டிங்,
BINDING போன்ற சேவைகளுக்கு
* மின்சாரம் தடைப்படும் நேரங்களில் ஜெனரேட்டர் பாவனை மூலம் Fax, Photo Copy, Laminating போன்ற சேவைகள் தொடர்ந்தும் நடைபெறும்.
* உள்நாட்டில், அல்லது வெளிநாட்டில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புக்கள் (Incoming Calls) எமது நிரந்தர வாடிக்கையாளர்களுக்கு இலவசமாகவே வழங்கப்படும்.
Sharp Photo Copy
"YATHAVANS"
No.38, Main Street, Batticaloa.
T'phone: 065 - 23336/23377/22117. Fax: 065 - 22504.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடர்கதையாகும் வன்முறைகளால் நசுக்கப்படும் பெண்ணினம்

**வெற்றிவேல் ஜெயகலா**

இன்று எமது நாட்டில் இடம் பெறும் யுத்த சூழலினால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை யுத்த நிகழ்வின் ஒரு பகுதியாகும். இவ் வன்முறைகள் மூலம் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் பல்வேறு வகையில் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதிலும் பொதுவாக தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் சர்வதேச சமூகத்தினரால் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஜனநாயக நாடான இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களின் சுதந்திரம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்களுக்கு இருக்க வேண்டிய பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போன்ற இன்னோரன்ன சுதந்திரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் இன்றைய தமிழ் மக்கள் தம் சொந்த நாட்டில் ஓர் அந்நியரைப் போல் பேசாமடந்தைகளாகவும், அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவற்றிலும் தமிழ் பெண்களுக்கெதிராக கட்டவிழ்ந்து விடப்படும் வன்முறைகளானது மிகவும் கொடுமையானதாகும். இன்றைய யுத்த சூழலினால் இன்று எத்தனையோ இளம் தமிழ்ப்பெண்கள் விதவைகளாக தமது வாழ்வே ஒரு கேள்விக் குறியான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றிடையே பெண்களின் பாதுகாப்பு என்பது இன்று கேலிக்கூத்தான நிகழ்வாகவே காணப்படுகின்றது. பாதுகாப்புப்படைகள் என்ற பெயரில் வருபவர்களே பெண்களின் வாழ்விற்கு பங்கம் விளைவிக்கின்றனர். இந்நிலையானது வேலியே பயிரை மேய்வது போன்ற தொரு செயலாகும்.

வடக்கு, கிழக்கில் இவ்வாறான நிலை தொடர்ந்தும் நடந்த வண்ணமே உள்ளது. வடக்கில் ஓர் கிரிசாந்தி, கிழக்கில் ஒரு கோணேஸ்வரி போல் இன்று எத்தனையோ, கிரிசாந்திகளும் கோணேஸ்வரிகளும் வெளித் தெரியாவண்ணம் இறந்தும், இறவாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டுமன்றி இவர்களின் இவ் வன்முறை வடிவமானது பல்வேறு வகைகளில் மாறுபட்டு வருவதும் அண்மைக் காலங்களில் இடம் பெறும் சம்பவங்கள் மூலம் வெளிப்படுகின்றது.

சோதனைச் சாவடிகளில் பெண்களை மிரட்டி தம் இஷ்டத்திற்கு அடிபணிய வைப்பதுடன் அவர்களிடம் கொள்ளைகளையும் நடத்துகின்றார்கள். அதிலும் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து வரும் பெண்கள் எனில் இவர்கள் புதுவிதமாக மிரட்டப்படுகின்றனர். அப்பாவிப் பெண்களின் மேல் புலிகள் என்ற பட்டம் சுமத்தப்பட்டு சிறைக்கதவின் பின்னால் அவர்கள் வாழ்க்கை முடக்கப்படுகின்றது. இத்துணைக்கும்இவர்கள் செய்த குற்றம் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் வாழ்வதே அவர்கள் செய்த குற்றமாகும்.

இத்தகைய செயல்கள் இன்றைய அரசின் மனிதாபிமானமற்ற அணுகு முறையையே எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் பெண்களிடமுள்ள பணம் நகைகளைப் பறிமுதல் செய்யும் உத்தியாகவும் அப்பகுதிப் பெண்களுக்கு "புலிகள்" என்ற பட்டம் சூட்டப்படுகின்றது. இவ்வாறு தாங்கள் "புலிகள்" இல்லை என மறுக்கும் இளம் பெண்கள் அவர்களின் உடமைகளை மிரட்டி பெற்றுக்கொண்ட பின்னர் விடுவிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு தமது உடமைகளை மறுக்கும் பட்சத்தில் புலிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர். இதனால் தம்மை நிரபராதியாக நிருபிப்பதற்காக ஒன்றும் அறியாத அப்பாவி இளம் பெண்கள் பலர் தமது உடமைகளை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை வேதனைக்குரியதாகும். இவர்களின் இவ் விளையாட்டுக்கு சுண்டெலிகளாக நசுக்கப்படும் இளம் பெண்களின் நிலை மிகவும் பரிதாபமானதாகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# துணிவு

பெண்ணே
நீ
விழித்து எழுவதற்கு
எது முட்டுக்கட்டை
நீ
உன்னை உயர்த்துவதற்கு
எது தடை
நீ
உன் ஆற்றலை
வளர்ப்பதற்கு
எது முட்கம்பி
ஓட்டு மொத்தமாக
நீ
வெளியே வராமல்
இருப்பதற்கு
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள்
ஓ...............
புரிந்து கொள்கின்றேன்
பெண்ணே புரிந்து
கொள்கின்றேன்!
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள் என்று
கல்யாணம் பெண்ணே!
கல்யாணம்!
கல்யாணத்தைக் காட்டி.
கட்டிப் போடுகிறார்கள் –
உன்னை
கடுமையான இருளில்!
பெண்ணே
நீ துணிந்தால் – உன்னை
வெளிச்சத்தைப் பார்க்க
முடியும்
நீ துணிந்தால்
தூணாக உயர்ந்து
உன்னாற்றலை வளர்க்க
முடியும்!
பெண்ணே
சமூகம் க(ா)ட்டும்
கல்யாணம்
கண்ணைக் கட்டி
காட்டில் விடும் வித்தை!
விஷமான வித்தைக்கு
பலியாக்காதே உன்னை...
உன்னால் புரிந்து
கொண்டவனை
உன்னை முழுமையாக
நேசிப்பவனை
உன் விருப்பு வெறுப்புக்களை
புரிந்து கொண்டவனை
புத்திசாலித் தனமாக
புருஷனாக ஏற்றுக்கொள்..
கண்ணியமான கல்யாணம்
இதுதான் பெண்ணே!
பெண்ணே – நீ
துணிந்து நின்றால் – உன்
எதிர்காலம்
கருங்கல் தூணாகும்
பெண்ணே!
துணிந்தபின்
துயில் கொள்ளாதே!

– ஸ்ரீகலா

# அரசனும் புலவனும்



முன்னொரு காலத்தில் ஒரு அரசனிடம் ஒரு புலவர் பாடுவதற்கு வந்தார். புலவர் பாட ஆரம்பித்தவுடன் அவரின் முன்னே ஒரு பெரிய தாம்பாளத்தட்டை கொண்டுவந்து வைக்கும்படி அரசன் தனது உதவியாளங்களிடம் கூறினான்.

புலவர் முதல் ராகம் பாடி முடிந்தவுடன் அவரின் முன்னால் இருந்த தாம்பாளத்தில் இரண்டு கைநிறைய பொன்னை அள்ளிப்போட்டான் அரசன். புலவன் பூரித்துப் போனான்.

இரண்டாவது ராகத்தைத் தொடங்கி மேலும் சிறப்பாகப் பாடினான் புலவன். அரசனும் மெய்மறந்து ஆகா... அடடா... என்று சொல்லி இசையை அனுபவித்தான். அந்த ராகத்தை புலவன் பாடி முடித்ததும் மேலும் இரண்டு கை பொன்னை அள்ளி தாம்பாளத்தில் குவித்தான்.

புலவன் மேலும் மகிழ்ச்சிகொண்டு மூன்றாவதது பாடலை ஒரு அபிநயம் செய்து படித்தார். அரசனும் நிறை சந்தோஷப்பட்டு ரசித்துக் கேட்டான். ராகம் முடிந்ததும் இன்னும் இரண்டு கை பொன்னை அள்ளி தாம்பாளத்தில் போட்டான். இப்படியாக ஆசையினால் புலவன் தொடர்ந்து பாடி இறுதியில் அலுத்துப்போய் பாடுவதை நிறுத்தினார். தாம்பாளமும் பொன்னால் நிறைந்துவிட்டது.

இறுதியாக அரசன் சொன்னான் 'நீர் பாடிப் பாடி என்னை மகிழ்வித்தீர். அதைப் போலவே நானும் உம் எதிரே பொன்னைக் குவித்துக் குவித்து உம்மை மகிழ்வித்தேன். இரண்டு மகிழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று சரியாய்ப் போய்விட்டது. இப்போது யாருக்கு யாரும் ஒன்றும் தரவேண்டியதில்லை. நீர் போய்விட்டு



வாரும் என்று சொல்லி தாம்பாளத்தை எடுத்து வீட்டுக்குள் வைக்கும்படி தனது உதவியாளனிடம் அரசன் கட்டளையிட்டான்.

# சிறுவர்பகுதி

## பிறந்தநாள் வாழ்த்து

சிறுவர் சிறுமியர்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் இப்பகுதியில் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி புகைப்படம், பிறப்பு சான்றிதழ் நிழற்பட பிரதி (Photo Copy) என்பனவற்றை இணைத்து 10 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். பிரசுரிக்கப்படும்.

பிறந்தநாள் வாழ்த்து

பெயர் :..................................................

முகவரி : ..................................................

பிறந்த திகதி :..................................................

..........................................
பெற்றோர் / பாதுகாவலர்
கையொப்பம்


## பிறந்த நாள் வாழ்த்து



4.1.98 இல் தனது 5வது
பிறந்தநாளை கொண்டாடிய
**சி.டிலக்ஷனை**
வாழ்த்துகிறோம்.
உபதபாலகம்
சந்திவெளி



9.1.98 இல் தனது 3வது
பிறந்தநாளை கொண்டாடிய
**பி.சியோந்தை**
வாழ்த்துகின்றோம்.
கோட்டைக்கல்லாறு - 2



07-01-98 அன்று தனது முதலாவது
பிறந்தநாளை கொண்டாடிய
செல்வி. R. பிரவீணா (அபி) யை
வாழ்த்துகிறோம்.
புதுமுகத்துவாரவீதி.
கல்லடி.
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீன் ஏஜ் ஸ்பெஷல்

ஹஜெந்தினி

**செக்ஸ் எந்த வயதில் சிறந்தது?**

வாழ்க்கை என்பது வெறும் உடல் சுகம் மட்டுமல்ல. அதைக் காட்டிலும் சில பெருமைகளும் மேன்மைகளும் அதில் அடங்கி யுள்ளன. உடல் சுகத்தை மட்டும் பெரிதாக நினைத்து தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் நிச்சயம் அதில் தடுக்கி விழத்தான் செய்வார்கள். எந்த வயதில் செக்ஸ் சிறந்தது என்பது பற்றி செக்ஸ்ஸோலஜி நிபுணர் டாக்டர். எஸ்.கே.அரோரா அவர்கள் விளக்குகிறார்.

**செக்ஸ் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி இதற்கு வயது வரம்பு ஏதேனும் உண்டா?**

செக்ஸ்"க்கு குறிப்பிட்ட வயது வரம்பு என்பது கண்டிப்பாக கிடையவே கிடையாது. 17 முதல் 70 வயது வரை உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் விரும்பினால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த நாளிலும் அதைப்பயன்படுத்தலாம். இது அவரவர் உடல் வலிமை மற்றும் மனவளர்ச்சியை மட்டுமே பொறுத்திருக்கிறது. பெண்ணின் கையை ஒரு ஆண்பிடிப்பதும், அவளுடன்



நெருங்கிப்பழகுவது, அவளை முத்தமிடுவதும் கூட செக்ஸ் வகையைச் சேர்ந்ததுதான். இதைப்பதினைந்து வயதிலும் செய்யலாம். 50 வயதிலும் செய்யலாம். சுருக்கமாகச் சொன்னால் அவரவர் மனோ பாவத்தை பொறுத்தது இது.

**செக்ஸின் வெளிப்பாடுகளை எந்தெந்த விதங்களில் தெரிந்து கொள்வது?**

1) குழந்தை பெற விரும்புவோர்.
2) அனுபவரீதியாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம்.
3) முறையற்ற உடலுறவுகள்.

இவற்றின் மூலமாக செக்ஸின் வெளிப்பாடுகளை நாம் தெளிவாக உணரலாம். வாழ்க்கைக்கு இது அவசியம் என்றாலும் கூட இது பற்றிய அறிவு அதைவிட மிகவும் அவசியமாகும்.


**ஆரம்பப்பருவத்தில் செக்ஸ் அவசியம் தேவையா?**

வெளிநாடுகளில் எல்லாம் பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் செக்ஸ் பற்றிய பாடங்களைப் போதிக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? பள்ளிப்படிப்பை முடித்து விட்டு வெளியே வருபவர்கள் செக்ஸ் என்றால் என்ன என்பது பற்றியும் அதிலுள்ள நல்லது கெட்டது பற்றியும் தெரியாமல் இருப்பார்கள். இதைப் பற்றி அவர்கள் பெற்றோரிடமா போய்க் கேட்டு தெரிந்து கொள்ள முடியும் அவர்களுக்கு. அவர்களுக்குப் போதிக்கப்படும் பாடங்களின் மூலமாக செக்ஸைப்பற்றி ஓரள்வு தெரிந்து வைத்துக் கொள்வது நியாயந்தானே.

நம் நாட்டில் இதற்கு நேர்மாறாக இருக்கிறது. செக்ஸ் பற்றி பேசினாலோ தவறு. அதற்கென்று ஒரு வயது உண்டு என்றெல்லாம் சொல்லி குழந்தைப் பருவத்தில் இருந்தே அவர்களை பிரெயின் வாஸ்(Brain wash) இதனால் இவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் அடிப்படையிலேயே (Basical) செக்ஸ் என்றால் என்னவென்றே அவர் களுக்கு தொரியாமல் போய் விடுகிறது. அதிலும் இன்னொரு கொடுமை செக்ஸ் உறவு வைத்துக் கொண்டால் குழந்தை பிறக்கும் என்பது கூட தெரியாத பெண்கள் சிலா இன்னும் இருக் கின்றனர். இந்த விபரம் தெரியா மலேயே அதில் ஈடுபடவும் செய் கின்றனர்.

**கணவன் மனைவி இருவருக்கும் செக்ஸ் பற்றி அவசியம் தொிந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் உண்டா?**

நிச்சயம் இது தெரிந்திருப்பது அவசியமாகும். பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் இது பற்றிச் சொல்லிக் கொடுப்பதில்லை. சிலருக்கு வெகுகாலம் வரை குழந்தையே இல்லாதிருப்பதற்குக் காரணம் இது பற்றி முறையாக அவர்களுக்கு தெரியாமல் இருப்பது தான். ஒரு சில பெண்களுக்கு இருக்கும் வெட்கத்தின் காரணமாக அவர்கள் கணவனிடம் சரியான ஒத்துழைப்புத் தரத்தவறி விடுகின்றனர். இதனால் மனம் வெறுத்துப்போகும் ஆண்கள் மற்றப் பெண்களை நாடும் போது அவர்களிடம் உள்ள நோயை இலவசமாக சம்பாதித்து கொண்டு வந்து வீட்டில் மனைவியுடன் சேரும் போது அந்த



நோயை வங்கியில் போடுவது போல் சேமித்து வைத்து திரும்பவும் அந்த நோயை தங்கள் மனைவி மாரிடமிருந்தே அசலும் வட்டியுமாக பெறுகிறார்கள். இதில் பாதிப்பது கணவன், மனைவி மட்டுமல்ல மற்றப் பெண்களும் கூடத்தான் இதற்காகத்தான் வலியுறுத்திச சொல்கிறேன். கணவன், மனைவி இருவருக்கும் செக்ஸ் முறை பற்றி பூரணமாகத் தெரிந்திருப்பது அவசியம். இதில் தவறு ஒன்றும் இல்லை.

**பெண்ணின் உடல் நிலையைப் பொறுத்து செக்ஸ் எவ்வாறு மாறுபடுகிறது?**

உடல் நிலையைப் பொறுத்தமட்டில் இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

1) "மாதவிடாய்" என்று சொல்லப்படும் "மென்சஸ்" காலங்களில் செக்ஸ் என்பதை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கக் கூடாது. அந்தச் சமயங்களில் அவர்கள் உடலில் தோன்றும அசுத்த ரத்தத்தினால் பலவித நோய்க்கிருமிகள் ஆண்களைத் தாக்கும். இதற்காகத்தான் "வீட்டுக்குத் தூரம்" என்ற பொருள்படும்படி பெண்களைத் தனியாக வைக்கச் செய்தனர்.

2) குழந்தை பெற்ற 40 நாட்கள் வரை பெண்கள் இதைக்கடைப் பிடிக்கக் கூடாது. தளர்ந்து போன பெண்ணின் உடல் உறுப்புக்கள் மீண்டும் பழைய நிலையை அடையும் வரை அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படக் கூடாது என்பதற்கா கத்தான் பெண்களைப் பிரசவம் முடிந்ததும் தாய் வீட்டில் கொண்டு போய் வைத்துக் கொள்கிறார்கள்.

**செக்ஸ் சம்பந்தமாக நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் ஏதாவது?**

"சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை" என்பார்கள். ஆனால் செக்ஸைப் பொறுத்த வரையில் நாம் எதையும் சொல்லியே தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம். செக்ஸ் சம்பந்தமாக கண்டெடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின் படி பார்க்கும் போது நூற்றுக்கு 75 பேர்கள் மனைவியைத்தவிர மற்றப் பெண்களை நாடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் நூற்றுக்கு 60 பேர்களுக்கு மேலாக செக்ஸ் சம்பந்தமான வியாதிகள் ஏற்படுகின்றன என்றும் தெரிய வந்திருக்கிறது. பொதுவாகப் பெண்களுக்கு மாதவிடாய் நின்று போய்விட்டால் குழந்தை பெறும் பாக்கியம் தான் ஏற்படாதே தவிர செக்ஸ் உணர்வு அவர்களுக்கு இருக்காது என்று கூற முடியாது. இதற்கும் செக்ஸ்"க்கும் தொடர்பேயில்லை! செக்ஸ் விஷயங்களில் மாத்திரைகள், இன்ஜெக்ஷன்ஸ், போதைப் பொருட்கள் போன்றவைகளை பயன்படுத்துவோர் தங்கள் உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்டு தீராத மனவியாதிக்கும் ஆளாவார்கள் என்பதே என் கருத்து.

# காதல் கடிதம் கொடுத்ததுண்டா?



## காதல் கடிதம் கொடுத்ததுண்டா?....

### காதல் கோட்டை நாயகியிடம் 15 கேள்விகள்.

1. எந்த மாதிரிப் புத்தகம் விரும்பிப் படிப்பீர்கள்?
படிக்கிற காலத்தில் க்ரைம் சப்ஜெட் படிப்பேன். இப்போதெல்லாம் காதல் கோட்டை மாதிரி மென்மையான சப்ஜெக்ட் தான் படிக்கப் பிடிக்கிறது.

2. எந்த நடிகருக்கு ஜோடியாக நடிக்க ஆசை?
கமல் சாருடன் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும்.

3. எந்த டைரக்டரின் இயக்கத்தில் நடிக்க ஆசை?
மணிரத்னம் டைரக்ஷனில்

4. ஆண்களிடம் பிடிக்காதது எது?
பேசும் போது முகத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு பேசுவது.

5. உங்களுக்கு யாராவது காதல் கடிதம் கொடுத்ததுண்டா?
படிக்கிற காலத்தில் நிழலாக ஒரு மாணவன் என்னை சுத்தி வந்தான். ஒரு நாள் வீட்டிற்கு கூப்பிட்டு "ராக்கி" கட்டி விட்டேன். அன்று முதல் அவனைக் காணவில்லை.

6. சினிமா நடிகைகள் பருமனாகி விடுவது ஏன்?
இந்தியப் பெண்களே கொஞ்சம் பருமன் தானே.

7. காதலித்ததுண்டா?
அம்மாவை, அப்பாவை, இப்போது தொழிலைக் காதலிக்கிறேன்.

8. திடீரென்று கிழவி ஆகிவிட்டால் என்ன செய்வீர்கள்?
பிளாஸ்டிக் சர்ஜரி செய்து மறுபடியும் குமரி ஆவேன்.

9. பிடித்த எழுத்தாளர்?
சரத்சந்திரன்

10. கல்யாணத்துக்கு பிறகு எத்தனை குழந்தை பெற்றுக் கொள்வீர்கள்?
அமைகிற வாழ்க்கையைப் பொறுத்து.

11. தமிழில் நன்றாக பேசத் தெரிந்த வார்த்தை எது?
நலம் நலமறிய ஆவல்.

12. யாரைப்பார்த்து ஜொள்ளு விட்டிருக்கிறீர்கள்?
இன்றைய இந்திய கிரிக்கெட் கேப்டனைப்பார்த்து.

13. வருங்காலக் கணவர் எப்படியிருக்க வேண்டும்?
நல்ல மனிதராக இருந்தாலே போதும். ஆமாம் அதற்குள் என்ன அவசரம்.

14. ஒரு கோடி ருபாய் சம்பளம் தருகிறோம். ஒரு படத்தில் படு கிளாமராக நடிக்க வேண்டும். என்று கேட்டால்?
காதல் கோட்டைக்கு முன்பு கேட்டிருந்தால் ஒகே. இப்போது "ஸோ ஸாரி" என்பது தான் என்பதில்.

15. பிடித்த பொன் மொழி?
செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள். விட்டுக் கொடுப்பதானால் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுங்கள். (மேல்நாட்டு பழமொழி)

## நட்சத்திர முகவரிகள்

**சேரன்**
இயக்குனர்.
59.:.6 2 வது மாடி
4வது கிராஸ் தெரு
கங்காநகர் கோடம்பாக்கம்
சென்னை 600024

**இந்து**
2, சர்குலர்ரோடு
யுனைட்டட் இந்தியா காலனி
கோடம்பாக்கம்
சென்னை 600024

**சூர்யா**
7, கிருஷ்ணாராவ் தெரு
தி.நகர்
சென்னை 600017

**பபிதா**
3, முதல்மெயின்ரோடு
2 வது கிராஸ்தெரு
நடேசன் நகர்
விருகம்பாக்கம்
சென்னை 600 092

**நீனா**
16, சாஸ்திரி நகர்
வடபழனி
சென்னை 600026



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினி நியூஸ்

### முரட்டுக்காதல்

நஷ்ணன் வழங்கும் ஸ்ரீசாய்பாவா ர்ட் சார்பில் பி.சிந்து தயாரிக்கும் காதல் "பூவே பூச்சூடவா" "வருஷம் பொம்முக்குட்டி அம்மாவுக்கு" ல்லை" "கிளிப்பேச்சுக் கேட்கவா" படங்களை இயக்கியவர் பாசில். தமான காதல் கதைகளை மயான காதல் கவிதைகளை சொல்பவர் பாசில். இவர் இயக்கி ரவுள்ள படம் முரட்டுக்காதல். ளத்தில் வெளியான ஒரு படத்தின் கம் இது. முரட்டுத்தனமான ந்தனம் நிறைந்த காதலைச் கும் கதை.

### சிறந்தபடம் "இருவர்"

னம் இயக்கிய இருவர் திரைப்படம் 20, 27ல் யுகோஸ்லாவியாவின் ிரேட் நகரில் நடைபெற்ற டவிழாவில் (Festival of Auteur View in to the World) சிறந்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. முழுவதிலும் இருந்து வந்து கொண்ட 60 திரைப்படங்களுக்கு ல் "இருவர்" படமும், இர்மாவெப் VEP) என்ற பிரெஞ்ச் திரைப்படமும் இடத்தைப் பகிர்ந்து கொண்டது டத்தக்கது.

### குருபார்வை

சிவாஜி கணேஷன் நடித்த வக்கு வைரம்" சுப்பர் ஆக்டர் ர் நடித்த "சாமுண்டி" மற்றும் பல ிப்படங்களை இயக்கியவர் ஞ்குமார். தற்போது இயக்கிவரும் ருபார்வை". குரு பிலிம்ஸ் சார்பில் க்கப்படும் இந்தப் படத்தில் ராஜ். குஷ்பு பிரதான வேடங்களில் றார்கள். ஈஸ்வரிராவ், இந்து, அரவிந்த், மணிவண்ணன் மற்றும் இதில் நடிக்கிறார்கள். டத்தை என்.ஜே.மோத்தி, பி.எல்.எஸ் ப்பன், மனோஜ்குமார் ஆகிய இணைந்து தயாரிக்கிறார்கள்.

### லா காதலா'வில் சோ

றாசன், பிரபுதேவா இணைந்து நம் படம் காதலா,காதலா. ர்யா, ரம்பா அப்படத்தில் அவர் த ஜோடியாக இணைந்து நடிக் கள். இப்படத்தில் நீண்ட வளிக்குப்பிறகு சோ நடிக்கிறார். சோ வில் ப்பதை நிறுத்திக் கொண்டு ஆகின்றன. இப்போது சோ நடிக்கிறார். அவர் நடிக்கும் ம் "படைப்பாளிபாத்திரம்" டைரக்ஷன் ம் சீனிவாசராவ். சோ தொடாந்து ரா? என்று கேட்டதற்கு "இந்தப் ல் நடிக்கிறேன்!" என்று அவரிடம் பதில் வந்தது.

### லீஸ் அதிகாரியாக ஷில்பாஷெட்டி.

தெல்லாம் ஷில்பாஷெட்டிக்கு எங்கே லும் தான் நடிக்கும் "ஆக்ரோஷ்" இந்திப்படத்தில் ஏற்றுள்ள போலீஸ் ாரிவேடத்தை பற்றியே பேசிக் ன்டிருக்கிறார் கதாநாயகன் அனில் . இருவருமே போலீஸ் அதிகாரிகள். ன் பிரதம மந்திரியைக் கொலை ய ஒரு தீவிரவாதக் கும்பல் மிட்டுள்ளதையறிந்து பிரதமரைக் ாற்ற இருவரும் பல சவால், சோதனைகளை மேற்கொண்டு போரா டுகிறார்கள்.

"இத்தகைய வேடத்தை இதுவரை நான் செய்ததில்லை. அடேயப்பா. எத்தனை சண்டைக்காட்சிகள், சீறிப்பாய்ந்து சண்டையிட்டுள்ளேன் தெரியுமா? எனக்கு மறக்க முடியாத கரக்டர் அது என்று சந்தோஷமாக கூறுகிறார் ஷில்பாஷெட்டி.

## சினிமா உலக வாசகர்களுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்



மீனா

### அப்பாஸுக்கு வாழ்த்துக்கள்.

காதலா? எனக்கா? இதுவரை ஏற்பட்டதில்லை. சரியான நபரைச் சந்தித்ததும் ஒரு வேளை வரலாம்! அப்பாஸுக்கும் எனக்கும் காதல் எல்லாம் கிடையாது. வெறும் நட்புத்தான். அவருக்கு மூன்று வருடத்திற்கு முன்பே திருமணம் நிச்சயித்து விட்டார்கள். இதைத் தெரிந்து கொண்ட பின் எந்த பெண்தான் அவரைக் காதலிப்பாள். எமது உறவு வெறும் தொழில் ரீதியான நட்பே. அப்பாஸுக்கு எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு என்று கூறியுள்ளார் சிம்ரான். அப்பாஸின் திருமண ரகசியம் தற்போது வெளியாகியுள்ளது.

அப்பாஸ் லூதியானாவைச் சேர்ந்த ஈரம் (பெயர் தான்) என்ற பெண்ணை காதலித்தாராம். அவரோடு பல இடங்களில் சுற்றியும் திரிந்தாராம். விஷயம் வீட்டிற்கு தெரிந்ததும் சொந்தக்காரப் பெண்ணை அப்பாசுக்கு (ஒக்டோபர் 16) வலுக்கட்டாயமாக திருமணம் செய்து வைத்து விட்டார்கள். ஈரத்தைக் காயவைத்து விட்டார் அப்பாஸ்.

அடடா, அடடா..!! அந்த உதட்டுச் சுளிப்பு, அதிரடிப்படை சுற்றி வளைத்துச் சுட்ட பிரமிப்பு..!!



சிம்ரான் தாஸ்

கிழக்கிலங்கையில் தரமான படங்களைத் திரையிட்டு வரும்
திருமலை நெல்சன் ஸ்தாபனத்தார்
வெகு விரைவில் தமது சொந்த வெளியீடாக
உங்களுக்கு தரவிருக்கும் புத்தம் புதிய
திரை விருந்துகள்

விஜயகாந்-மீனா — சேதுபதி I.P.S

நெப்போலியன்-குஷ்பு — எட்டுப்பட்டி ராசா

விஜயகாந்- ரம்பா — தர்மசக்கரம்



கவுண்டமணி

ஒக்கண் பார்வையில் உற்பத்தியாகும் உச்சபட்ச வோல்டேஜ் மின்சாரம் ஊர் முழுசுக்கும் போதும்.

## சினிமா உலகம்

### மலையாளத்தில் சுவலட்சுமி


"ஆசையில்" அறிமுகமாகத் தொடங்கி இன்று தமிழ்பட உலகில் ஒரு முன்னனி நடிகை சுவலட்சுமி. சுவலட்சுமி இப்போது மலையாளப்படத்திலும் நடிக்கிறார். அவர் நடிக்கும் முதல் மலையாளப்படம் "அனுராககொட்டாரம்" சுனில் டைரக்ட் செய்யும் இதில் திலீப், ஜகதிஸ்ரீகுமார் நடிக்கிறார். பிரத்யட் சார்பிலிம் சார்பில் பி.ராமகிருஷ்ணன் தயாரிக்கும் இப் படத்திற்கு இளைய ராஜா இசை அமைக்கிறா். மணியன் பிள்ளை ராஜு" கொச்சின் ஹனி.'.பா, கல்பனா. சத்யபிரியா ஆகியோரும் இதில் நடிக்கிறார்கள்.

ஒளிப்பதிவு

வேணுகோபால்.



ரோஜா




'பகவத்சிங்' படத்தில் சங்கவி

## காதலா வேண்டாம்
### ~ சங்கவி ~

இத்தனை நாட்களாக ஏதோ நடிப்பார்..... நிறைய கவர்ச்சி காட்டுவார் என்று மட்டுமே நாம் நினைத்திருந்த சங்கவி பொற்காலம் படத்தில் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்.

பல பத்திரிகைகளும் பொற் காலம் படத்தில் அவரது நடிப்பை தனியாகப் பாராட்டி உற்சாமூட்ட சந்தோஷத்தின் உச்சியில் இருக்கிறார் சங்கவி. ஒரு நடிகை இளம் வயதாக இருந்தால் கவர்ச்சியாக நடிக்கலாம். தவறில்லை. ஆனால் அப்படி நடிப்பதால் ஒரு போதும் ஆத்ம திருப்தி கிடைக்காது. ஏதோ வந்தோம் நடித்தோம் என்று தான் இருக்கும். ஆனால் "பொற்காலம் படத்தில் அதிக மேக்கப் இல்லாமல் குறும்பு சோகம் ஏமாற்றம் என்று பலதரப்பட்ட உணர்ச்சி களை காண்பித்து நடிக்கக்கூடிய கதா பாத்திரம் எனக்குக் கிடைத்தது. என் அதிர்ஷ்டம் தான்.

அந்தக் கதாபாத்திரத்தில் மிகவும் மனம் ஒன்றி நடித்தேன். அந்தக் கதாபாத்திரத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் அதன் இயக்குனர் சேரன் அவர்கள்.

நடிகர்களிடமும் திறமைகள் இருக்கிறது. அதை வெளிக்காண்பிக்க தகுந்த கதாபாத்திரம் அமைய வேண்டும். அப்படி ஒன்று எனக்கு அமைந்தது என் அதிர்ஷ்டம் தான்.

காதல் அனுபவம் பற்றி சங்கவியிடம் கேட்டபோது?

இதுவரை ஏற்பட்டதில்லை. ஆனால் பொற்காலம் படத்தில் நடித்த போது மனம் என்றுக் காதலித்தது. பிறகு அது நிறைவேறாவிட்டால் எவ்வளவு துன்பம் என்பதைத் தெரிந்து கொண்டேன். காதலித்தால் அது வெற்றி பெற வேண்டும்.... இல்லை அது வேண்டாம்.

காதலே வேண்டாம் சாமி!

**எதிர் கால ஆசை?**

நல்ல கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும். நகரை விட்டு ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு வீடு கட்ட வெண்டும். வீட்டைச்சுற்றி புறமான அமைதியான இடத்தில் செடி கொடிகள் நட வெண்டும். அந்த இடத்தில் அமைதியும் தூய்மையும் இருக்க வேண்டும். ஒரு ஆஸ்ரமம் போல் அந்த இடம் அமைய வேண்டும். அமைதி வேண்டும். எப்போதெல்லாம் போக தோணுகிறதோ அப்போது நான் அங்கு போக வேண்டும்.

**அடுத்த நூற்றாண்டு பற்றி?**

ஒரு புறம் மகிழ்ச்சியாக இருக்கிறது. மறுபுறம் ஏதோ ஒரு வித பயமாகவும் இருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி பற்றி நினைத்தால் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் பெருகி வரும் சனத்தொகை எய்ட்ஸ் பல்வேறு பற்றாக்குறைகள் ஏறக்குறைய பணம் சம்பாதிக்கும் இயந்திரமாகி மனிதர்கள் இதையெல்லாம் பார்க்கும் போது எப்டியிருக்குமோ என்று பயமாகவும் இருக்கிறது. அட இன்றைய பொழுதை பார்ப்போங்க! அந்தந்த நாள் நல்ல படியாகப் போனால் போதும்! அடுத்த நூற்றாண்டு வரும் போது பார்ப்போம். என்று சிரித்துக் கொண்டே கூறினார் சங்கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிரஜை நாடு

1987.மே.22, வடமாராச்சி ஊர் அமைதியாக இருந்தது. விலங்குகளும் சத்தம் போடவில்லை. பாதை விளிம்புகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு உறக்கத்தில் இருந்தன. எந்த வீடும் வெளிச்சமாயிருக்கவில்லை. பாடசாலையிலிருந்து 3 வீடுகள் தள்ளியிருந்த அந்த வீடும் அமைதியாயும், இருளாயும் இருந்தது. வீட்டில் உருவங்கள் சத்தமில்லாமல் நடமாடின. பழகிப் போய் விட்டதால் இருளில் நடமாடுவதற்கு அந்த உருவங்கள் தடு மாறவில்லை.

“அம்மா பயமாயிருக்கம்மா.......” மிக மெதுவா அந்தச் சிறுவன் பயப்பிட்டான். “உஸ்...... பயப்பிடாத ஒண்டும் நடக்காது.” அவன் அருகில் இருந்த அம்மாவின் குரலிலும் கலக்கம் கலந்திருந்தது. கடிகாரம் பெரிதாகச் சத்தம் போடுகிறதோ என்று நினைக்க வந்தது. “அப்பா எங்கேம்மா?” மீண்டும் மெலித்தாக சிறுவனின் குரல் கேட்டது. “மெல்லமா அப்பா இப்ப வந்துடுவார்.” நேரம் நீளமாகப் போய்க் கொண்டிருந்தது. எங்கும் அமைதி. எதுவுமே அசையவில்லை. வீடுகளுக்குள் பதுங்கியிருந்த மனிதர்கள் எதையோ எதிர்பார்த்து பயப்பட ஆரம்பித்தார்கள். பயந்தார்கள், பயந்து வியர்த்தார்கள்.

“பயமாயிருக்கம்மா..........” சிறுவன் மறுபடி பயப்பட்டான்.

சிறுவனுக்கு பத்து வயதிருக்கலாம். பெயர் கணேசமூர்த்தி. கணேசன் என்று தான் கூப்பிடுவார்கள். முதலாம் வகுப்பு வரைமட்டுமே ஒழுங்காக படித்திருந்தான். இராணுவ அட்டகாசங்கள் அவன் பாடசாலைக்கு போய் படிப்பதை தடை செய்திருந்தன. இதனால் அவனுக்கு பொது அறிவு போது மானதாக இருக்கவில்லை. அவனுக்கு எதுவும் புரியவில்லை.

“ஏன் பயப்பிட வேணும்?” “ஆருக்கு பயப்பிடவேணும்?” “ஏன் ஆக்களை சாகக் கொல்லுறார்கள்?”

எதுவும் அவனுக்கு தெரியாது. யாரும் அவனுக்கு இந்த விபரங்களை தெரிவிக்கவில்லை. தானாக அறிவதற்கும் வயது அவனுக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து.

பயம் ஒன்றைத்தான் அவன் பரிபூரணமாக அறிந்திருக்கிறான்.

“கவனமாப் போ!” “ஆமிக்காரங்கள் வருவாங்கள்.” “ஆமிக்காரங்களை கண்டா ஓடி ஒழி” “ஹெலிகொப்ரர் வந்தா மரங்களுக்கு கீழ போய் நில்.” “றோட்டில் ஆக்கள் ஒருத்தரும் இல்லாட்டி பக்கத்தில இருக்கிற வீடுகளுக்க போய் நில்.” பாடசாலைக்கு போகும், அல்லது வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் இப்படியான எச்சரிப்புகள். கவனங்கள், கவலைகள். எவ்வளவுதான் வீராப்பாகப் போனாலும் பாதையில் காணப்படும் அசாதாரண நிலமையும், பெற்றோரின் எச்சரிப்புகளும் கணேசனில் பயத்தை உண்டாக்கி விடும். உடனே திரும்பி வந்து விடுவான்.

இந்தப் பயம் சில நாட்களில் நிரந்தரமாகவே மனதைப் பற்றிக் கொண்டது. வீட்டில், பாடசாலையில், பாதையில், கடையில், படுக்கையில் எப்போதும் பயம், பயம், பயம். அந்தப் பயத்தினால் விஷேச ஜாக்கிரதைகள்.

பழைய 'அம்புலிமாமா', 'ரத்னமாலா' க்களில் தேவர், அசுரர். சண்டைகளைப் பற்றி கணேசன் எழுத்துக்கூட்டி வாசித்திருக்கிறான். ஆனால் இப்போது நடக்கும் சண்டை யாருக்கிடையில் என்பதை உண்மையாகவே அந்த சிறுவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

'ஆமிக்காரங்கள் பொல்லாதவங்கள்.' 'ஆக்களைக் கண்டால் சுட்டுப் போடுவாங்கள்.' 'ஆக்களை கண்டபடி வெட்டுவாங்கள்.' இவை மட்டுமே கணேசனுக்கு தெரியும். ஆமிக்காரங்களின் கண்களில் படாமல் தான் தப்பிக் கொள்ள வேண்டும் என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் இன்றுவரை ஒரு ஆமியையும் அவன்தன் கண்களால் பார்க்கவில்லை! தங்களை பயப்படுத்துபவர்கள். எப்படியிருப்பார்கள் என்றே தெரியாதிருந்தது. புராண கதைகளில் வரும் அசுரர்களைப் போலவே ஆமிக்காரங்களின் உருவத்தையும் தற்காலிகமாக அவன் கற்பனை செய்து வைத்திருந்தான்.

திடீர், திடீரென தெருக்களில் சனங்கள் ஓடுவதையும், திடீர், திடீரென்று பிரேத ஊர்வலங்கள் போவதையும் வீட்டுக்குள் இருந்தவாறே கணேசன் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போதெல்லாம் அவனுக்கு பயமாயிருக்கும்.

“நாங்களும் செத்துப் போவோமா?”

தனியே இருக்கப் பயந்து ஓடிவந்து அப்பாவையோ, அம்மாவையோ கட்டிப் பிடித்துக் கொள்வான். உடல் நடுங்கும், வியர்க்கும். பிரேத ஊர்வலம் பார்த்த இரவு பயங்கரக் கனவெல்லாம் வரும். சில வேளைகளில் நித்திரையிலே கத்தி விடுவான். விழித்துக் கொண்டபின் தூக்கமே வராது.

படிப்பில்லை, நண்பர்களுடன் விளையாட்டில்லை, வெளியே போய்வரத் துணிவுமில்லை, அனுமதியுமில்லை. கணேசனுக்கு சீ என்றிருந்தது. வேலைக்கு போவதற்கு அப்பா வெளியே புறப்படுகையில் அவனுக்கு பீதியாயிருக்கும்.

“அப்பா போகாதையுங்கோ, ஆமிக்காரங்கள் சுட்டுப் போடுவாங்கள்” என்று ஒருநாள் சொல்லி அம்மாவிடமிருந்து நன்றாக அடிகள் வாங்கிக் கொண்டான்.

“சனியன் வெளியில போகேக்க இப்படியே சொல்லுறது”

இதன் பின் கணேசன் வாய்விட்டு எதுவும் சொல்லாவிடினும் அப்பா வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் மனதுக்குள் பயந்து கவலைப் படுவான். அப்பா திரும்பி வரும் வரையும் வெளிக் கதவருகே காவல் இருப்பான். அவனை பயப்படாதே என்று சொல்லுமளவிற்கு அம்மாவுக்கு தைரியமில்லை, அப்பாவுக்கு நேரமில்லை.

“அப்பா எங்கேம்மா?” கணேசன் மறுபடியும் கவலைப்பட்டான். “வந்திடுவார்.” அம்மா சுருக்கமாக பதிலளித்தார்.

எங்குமே நிசப்தம், அசாதாரண அமைதி, எல்லா வீடுகளிலும் எல்லோரும் ஒரே மாதிரியாக பயந்து போயிருந்தார்கள், கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது. கணேசன் மீண்டும் ஏதோ கேட்க முயற்சிப்பதுக்குள் அம்மா அவனை பேசாமலிருக்கும் படி சைகை செய்துவிட்டு காதைக் கூர்மையாக்கினாள். தூரத்தில் மிக மெலிதாக அந்த சத்தம் ஆரம்பித்தது. எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட சத்தம்.

அம்மா பரபரப்பானாள், கணேசனை ஒரு கையால் இறுக்கப் பிடிச்சாள், இருளில் அங்கும் இங்கும் மோதியபடி வெளிக் கதவை திறந்து ஓடினாள். கணேசனும் இழுபட்டான். வேலியோடிருந்த வேப்பமரத்தின் அருகே வெட்டப்ப பட்டிருந்த பதுங்கு குழிக்குள் அம்மா குதிக்க தொடர்ந்து கணேசனும் விழுந்தான்.

“உஸ்..........” மெதுவாக முனகினாள். “நோகுதோ?” அம்மா பரிவோடு கேட்டாள்.

முழங்காலில் வந்திருந்த சிராய்ப்புக் காயத்தை கைகளால் தடவிய படியே இல்லையென்றான். சிறிது நேரத்தில் காதை செவிடாக்கும் ரீங்காரம். இராட்சத பறவைகள் மிகத் தாழ்வாக பறந்து திரிந்தன குண்டு முட்டைகள் போட்டன. அக்கம் பக்கத்து வீடுகளில் ஆட்கள் பரபரப்பாய் ஓடும் சத்தங்கள். பதுங்கு குழிக்குள் குதிக்கும் சத்தங்கள். திடீர், திடீரென பெரிய சத்தங்களுடன் நிலம் அதிர்ந்தது. கணேசன் பயத்துடன் அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

கண்ணைப் பறிக்கும் வெளிச்சங்கள். யார் யாரோ




அழும் சத்தங்கள். மீண்டும் மீண்டும் வெடிச்சத்தங்கள் நில அதிர்வும். கணேசன் கண்ணை மூடிக் கொண்டான். அப்போது பயம் இன்னும் அதிகரிக்க உடனே கண்களை திறந்து கொண்டான். நேரம் போய்க் கொண்டிருந்தது.......... இருள் முற்றாகப் பரவியிருந்தது. காலில் ஊர்ந்த எதோ ஒன்றைக் கணேசன் உதறினான்.

பூச்சியோ?, மட்டத்தேளோ?, பாம்பும் வருமா? எதற்குப் பயப்பிடலாம்? பயப்பிடாமல் இருக்கவே முடியாதா? வியர்வையில் மண் ஒட்டி உடம்பு முழுதும் பிசுபிசுத்தது. கற்கள் குத்தி வலித்தன. நன்றாக இருக்கவும் முடியாமல் அவர்கள் அவஷ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

1987.மே.23, பதுங்கு குழி

வெளிச்சம் தயங்கியபடி பிரவேசித்தது. தூங்காத கண்களுடன் கணேசனும் அம்மாவும் கூசினார்கள். “அப்பா எங்கேம்மா?” அன்றைய முதல் கேள்வியை கேட்டான் கணேசன். “மாமா வீட்டில நிண்டிருப்பார். இண்டைக்கு கட்டாயம் வருவார்.” மகனுக்கு சமாதானம் சொன்னாலும் 'அவர் எங்கே?' என்ற கேள்வி அவளை கலங்க வைத்தது.

“வீட்டுக்கு போவோமா?” கணேசன் கேட்டான். “கொஞ்சம் பொறு” என்று அம்மா காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

வித்தியாசமான சத்தங்கள் எதுவும் கேட்க்காததால் “எழும்பு போவோம்” என்றாள்.

முதலில் அம்மா பலமுறை சறுக்கியபின் வெளியே வந்தாள். சற்று தூரத்தில் குவியல்களாக கிடந்த கடதாசிகள் அவளைக் கவர அவற்றை நோக்கி போனாள்.

“அம்மா என்னைத் தூக்கி விடுங்கோ.” கணேசன் பதுங்கு குழிக்குள் இருந்து குரல் கொடுத்தான். குவியல்களில் இருந்து ஒன்றை எடுத்துப் பார்த்த அம்மா திடுக்கிட்டாள்! நான்கு நாட்களுக்கு தொடர்சியாக ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும், வெளியே நடமாடுவோர் சுடப்படுவர் என்றும் சுத்தமான தமிழில் எழுதப்பட்டிருந்தது.

மறுபடியும் வானத்தில் ஆரவாரம்......!

விமானங்கள் தெரிய ஆரம்பித்தன. அம்மா திரும்பவும் பதுங்கு குழிக்குள் இறங்கினாள். “என்னம்மா?” கணேசன் பதட்டத்தோட கேட்டான். “ஒருத்தரையும் வெளியில திரிய வேண்டாமாம், கண்டா சுட்டுப் போடுவாங்களாம்.” கணேசனுக்கு ஏன் என்று கேட்கத் தெரியவில்லை. இருவரும் அப்படியே இருந்தார்கள். விமானங்கள் வந்தன, குண்டுகள் போட்டன, பறந்து போயின. விமானங்கள் வந்தன, குண்டு......

1987.மே.24, பதுங்கு குழி

கணேசனும், அம்மாவும் சோர்ந்து போயும் களைத்துப் போயும் இருந்தார்கள். தூங்காத கண்கள் சிவப்பாகியிருந்தன. எறும்புகள் கடித்ததால் உடம்பில் ஆங்காங்கே பரவலாக மேடுகள் உண்டாகியிருந்தன. கணேசன் கொட்டாவி விட்டான். இது எத்தனையாவது என்று அவனுக்கு மறந்து போய்விட்டது. அவனுக்கு பசித்தது, மிகவும் நன்றாக பசித்தது, தலையைச் சுற்றியது, தூக்கம் வந்தது.

இவையெல்லாவற்றையும் மீறி பயம் நிறைந்திருந்தது. அம்மாவுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவன்தான் என்ன செய்ய முடியும்? வெளியில் போகச், சுட்டுக் கொன்று விடுவார்களே. கவச வாகனங்களின் இரைச்சல் கூட மிக துல்லியமாக கேட்டது.

இராணுவம் அருகாமையில் வந்து விட்டதை அவள் அறிந்து கொண்டாள்.

யுத்த ஆரவாரம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன.

இராணுவத்தின் பிடிக்குள் தாம் சிக்கிக் கொண்டதாக எல்லோரும் அனுமானித்துக் கொண்டார்கள்.

கணேசனுக்கு பசி வயிற்றை பிராண்டியது, உடம்பெங்கும் எரிந்தது, தலை சுற்றியது. அம்மா அவனைப் பார்த்து கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். பகல் போய் இரவு வந்தது. அவர்கள் அப்படியே இருந்தார்கள்.

1987.மே.25, பதுங்கு குழி

வெடிச் சத்தங்களுடன் விடிந்தது. கணேசன் சுருண்டு படுத்திருந்தான். கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன. அம்மா அவனை பரிவுடன் தடவினாள். உடம்பு மிக வெப்பமாக இருந்தது. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அங்கும் அதே வெப்ப நிலைதான். காய்ச்சலா? அவன் தலையை தூக்கி மடியில் வைத்தாள்.

“என்ன செய்யுது ராசா?” “பசிக்குதம்மா......” கணேசன் மெலிதாக முனகினான். அம்மா கொஞ்ச நேரம் யோசித்தாள். அவனை மெதுவாகத் தூக்கி, மெதுவாக மண்ணில் படுக்க வைத்துவிட்டு பதுங்கு குழியிலிருந்து வெளியே வந்தாள். யாரும் இல்லை. வேகமாக வீட்டினுள் ஓடினாள். சமையலறையில் புகுந்து சாப்பாடு தேடினாள். அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டாள். படுக்கை அறையில் புகுந்து பரபரப்பாக தேடினாள். கொஞ்சத் தாமதத்தின் பின், டிஸ்பிறின் அகப்பட்டது. எல்லாவற்றுடனும் வெளியே வரும்போதுதான் அவள் கவனித்தாள்.

சின்ன இடைவெளிக்கு அப்பால் நீட்டிய துப்பாக்கிகளுடன் இராணுவம் வந்து கொண்டிருந்தது.

கணேசனுக்கு நா வரண்டது. தலை பாரமாக இருந்தது.

“அம்மா” என்று முனகினான். சிரமப்பட்டு தலையை தூக்கிப் பார்த்தான், அம்மாவை காணவில்லை!

“அம்மா” என்று கூப்பிட்டான். அவனுடைய குரல் அவனுக்கே கேட்கவில்லை. கண்கள் நன்றாக திறக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் கொதித்தது. சில எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன........ 'அம்மா எங்கே?' அவனுக்கு பயமாகவும், கவலையாகவும் இருந்தது. அம்மாவுக்காகக் காத்திருந்தான்.

அம்மா வரவில்லை. 'அம்மா எங்கே?' பயம் அவனைக் கலவரப் படுத்தியது.

'அம்மாவை ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானோ?'

'இனி நான்தானே, அடுத்ததாய் என்னைத்தானே பிடிப்பாங்கள்! பிடிச்சா சுட்டுப் போடுவாங்களோ?'

தொடர்ச்சி 15ம் பக்கம்

பார்த்திபன்

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த எழுத்தாளர்களில் முக்கியமானவர் பார்த்தீபன். வித்தியாசமான விடயங்களையும் யதார்த்த சூழ்நிலைகளையும் தனது சிறுகதைகளில் கொண்டு வர முயற்சிப்பவர்.
இவரது சிறுகதைகள் அமைப்பில் அதி உச்சத்தை தொடவில்லை யாயினும் குறிப்பிடக்கூடியளவான ஒரு எழுத்தாளனின் தன்மையை காட்டி நிற்கின்றன. பிரான்சிலிருந்து வரும் “அம்மா” சஞ்சிகையில் இருந்து இச்சிறுகதை நன்றியுடன் பிரசுரமாகிறது. (ஆ.ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிணாம வளர்ச்சி கண்டுள்ள ஈழப் போர்முனை

இலங்கையில் 70களின் நடுப்பகுதியில் ஆரம்பமான இனப்பிரச்சனையின் அடிப்படையிலான ஆயுதப் போராட்டம் பின்னாளில் விரிவடைந்து உள்நாட்டு யுத்தமாக வெடித்தது. 83இல் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான நாடுதழுவிய கலவரங்களும் இந்திய அரசாங்கத்தின் உதவியும் போராட்டம் வேகமாக வளர உதவியது.

மத்தியில் மாறி மாறி வந்த அரசுகளால் இனப்பிரச்சனை தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய ஒரு விடயமாகக் கருதப்பட்டுக் கையாளப்பட்டு வந்ததேயொழிய தமிழர்களுக்கான நியாயமான உரிமைகள் வழங்கப்படவேண்டும்: அவர்கள் சகல உரிமைகளுடனும் சமத்துவமான பிரஜைகளாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பெல்லாம் இருக்கவில்லை.

அத்துடன் இனப் பிரச்சினையும், அதனால் எழுந்துள்ள

குமாரதுங்கா காலிக்கு நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ள வருவதாக இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

தென்னிலங்கையிலுள்ள ஏதாவதொரு படைமுகாமிலோ பொலிஸ் நிலையத்திலோ மோதி வெடிக்க வைப்பதற்காக லொறியில் வெடிமருந்து எடுத்து வரப்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்பட்ட போதிலும், லொறியில் இருந்த வெடிமருந்து முகாமொன்றைத் தாக்க போதுமானதாக இல்லை எனப் பாதுகாப்பு தரப்பால் தெரிவிக்கப்படுகின்றதால் அந்த ஊகத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது உள்ளது.

களுவாஞ்சிக்குடியிலிருந்து வெடிமருந்துகளைச் சுமந்து கொண்டு காலி வரை ஒரு லொறி வந்திருந்ததனால் அது படையினரின் பாதுகாப்பிலுள்ள பலவீனத்தையும், புலிகளின் திறமையையுமே பறை சாற்றுகிறது. குறைந்தது 10 சோதனைச் சாவடிகளையாவது தாண்டியே இந்த லொறி நகரைச் சென்றடைந்திருக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

துள்ளதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து நவம்பர் 5 தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் விமானங்கள் பறப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

விமானப்படை எதிர் நோக்கும் பீதியின் தரத்தை கடந்த 21ம் திகதி நடைபெற்ற சம்பவமொன்றிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

டிசம்பர் 21ம் திகதி ஞாயிறு அன்று திருமலை டொக்யார்டில் அமைந்துள்ள கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகத்தில் இடம் பெற்ற

தமிழில்: ஸ்ராலின்

பயிற்சியை முடித்து வெளியேறுவோரின் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ள பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்தரத்வத்த, கடற்படைத்தளபதி வைஸ்

**விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்ட புலிகளின் நான்கு குழுக்களாவது குறைந்தது இப்பகுதியில் நடமாடுவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து நவம்பர் 5 தொடக்கம் கிழக்கு மாகாணத்தில விமானங்கள் பறப்பது நிறுத்தப்பட்டுள்ளது.**

யில்லை என விமானப்படையினர் தெரிவித்தமையே ஆகும்.

தனது அலுவல்களை முடித்துக்கொண்ட ஜெனரல் ரத்வத்த தான் வான் பரப்பின் ஊடாகவே கொழும்புக்குப் பயணம் செய்ய வேண்டுமென வற்புறுத்தியதையடுத்து அதி உச்ச பாதுகாப்புடன் பிரதி அமைச்சரை

ஹெலிக்கொப்டரில் அனுப்பி வைப்பதற்காக நடவடிக்கைகள் பணிப்பாளர் - ஏயார் கொமடோர் ஜயலத் வீரக்கொடி தாமே ஏற்பாடு



இல்லாததால் முகாமிலுள்ள வீரர்கள் உலர் உணவை மட்டுமே உண்டு வருவதாகத் தெரிகின்றது.

இந்த நிலையை நீடிக்க விடாமல் திருமலையில் புலிகளின் ஏவுகணைக் குழுக்களைத் தேடி படையினர் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறு இருந்த போதும் நடைபெறும் சம்பவங்கள் இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் எதிர் காலத்தில் நாடெங்கிலும் விரிவுபடுவதுடன் பெரும் அழிவு



# கிழக்கில் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் அணிகள்'

வன்முறையும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டுமே நடைபெறும் ஒரு நிகழ்வாகக் காட்டுவதிலேயே அரசு பிரயத்தனம் செய்து வந்தது. எனினும் இனப் பிரச்சினை தொடர்பான போராட்டம் பரிணாம வளர்ச்சி கண்டு தலைநகர் கொழும்பை மட்டுமல்ல தெற்குப்பகுதிகளான காலி, கதிர்காமம் போன்ற இடங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

தற்போதைய நிலையில் வடக்கு கிழக்கில் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவோ அது போன்று தெற்கிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டிய கட்டத்திற்கு நிலமைகள் சென்றுள்ளன. அண்மைய சம்பவங்கள் இதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

**இனப்பிரச்சனையும் அதனால் எழுந்துள்ள வன்முறையும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டுமே நடைபெறும் ஒரு நிகழ்வாக காட்டுவதிலேயே அரசு பிரயத்தனம் செய்து வந்தது. எனினும் இனப்பிரச்சனை தொடர்பான போராட்டம் பரிணாம வளர்ச்சி கண்டு தலைநகர் கொழும்பை மட்டுமல்ல தெற்குப் பகுதிகளான காலி, கதிர்காமம் போன்ற இடங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.**

இந்தக் குண்டு வெடிப்பின் மூலம் மற்றொரு உண்மையும் புலனாகின்றது. அதாவது புலிகளைப் பொறுத்தவரை எதுவும் பெரிய விடயம் அல்ல. தங்களால் இயலாத விடயம் என எதுவுமே இல்லை. தாம் நினைத்தவாறு இலங்கையின் எப்பகுதியிலும் தாக்குதல் நடாத்தக் கூடிய அளவிலேயே அவர்கள் உள்ளனர். இதனை அவர்கள் பல தடவைகள் நிருபித்தும் உள்ளனர்.

இதே வேளை கிழக்கு மாகாணத்தில் இலங்கை விமானப் படையின் ஏவுகணை அபாயத்தை

அட்மிரல் சிசில் திசேரா ஆகியோர் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் புறப்பட்டனர்.

ஆனால் திட்டமிடப்பட்டதற்கு மாறாக கந்தளாய் குளக்கட்டிலேயே ஹெலி இறக்கப்பட்டு, தரை, ஆகாய பாதுகாப்புகளுடன் அதிதிகள் தரை மார்க்கமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தரைப்பாதுகாப்புடன் இவர்களுக்கு வானில் 2 எம்.ஐ 11 ரக ஹெலிகளும் பாதுகாப்பு வழங்கின.

இந்தத் திடீர் மாற்றத்தின் காரணமாக கந்தளாய்க்குளம்

களைக் கவனிக்க விரைய வேண்டியிருந்தது.

இந்த ஏவுகணை அச்சுறுத்தல் வேறும் பல பிரச்சினைகளைக் கிழக்கில் ஏற்படுத்தியுள்ளது. திருமலை மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம் ஒன்றிற்கு சீரான உணவு வினியோகம்

களையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தும் என்பதையே புலப்படுத்துகின்றது.

யுத்தத்துக்குச் சமாதான தீர்வு ஒன்று உடனடியாக எட்டப்படாவிட்டால் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை தங்குதடையின்றி தொடரும் என்பதில் ஐயமில்லை.

நன்றி ஸண்டே ரைம்ஸ்


## 'காலிக்குண்டின் இலக்கு என்ன?'

களுவாஞ்சிக்குடியிலிருந்து புறப்பட்ட 40 -8182 இலக்க எல்ப் ரக ட்ரக் கடந்த 28ம் திகதி அதிகாலை 2.30 அளவில் காலி நகரின் புறநகர்ப்பகுதியான மாகொல்ல என்ற இடத்தில் வெடித்துச் சிதறியது. காலியிலுள்ள "தக்ஷின" என்ற கடற்படை முகாமின் அருகிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

இந்த லொறியில் கொண்டு செல்லப்பட்ட குண்டின் இலக்கு யார் அல்லது எது என்பது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

காலி நகரில் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியொன்றில் பங்கு பற்றுவதற்காக வருகை தந்திருந்த கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் சிசில் திசேரா சம்பவ இடத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த தக்ஷின முகாமிலேயே தங்கியிருந்தார். இவர் இந்தக் குண்டின் இலக்காக இருந்திருக்கலாம். அல்லது ஜனாதிபதி சந்திரிகாவாக இருந்திருக்கலாம். ஏனெனில் மறுதினம் ஜனாதிபதி சந்திரிகா

எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பை பொறுத்தவரை இறுதியாக கடந்த 14ம் திகதியே குண்டு வீச்சு விமானமொன்றை மட்டக்களப்பு



வான் பரப்பில் அவதானிக்க முடிந்தது. 26ம் திகதியே ஹெலிக் கொப்டர் ஒன்றை காண முடிந்தது.

அதற்குப் பின்னரும், அதற்கு முன்னர் ஒரு சில வாரங்களாகவும் வான் பரப்பில் எவ்வித விமானங்களையோ ஹெலிகளையோ அவதானிக்க முடியவில்லை.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்ட புலிகளின் 4 குழுக்களாவது குறைந்தது இப்பகுதியில் நடமாடுவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்

திருமலைக்குமிடையில் உள்ள வான் பரப்பில் ஜெனரல் ரத்வத்தையின் பாதுகாப்பிற்கு' உத்தரவாதம் வழங்க தாம் தயாரா

## இளவரசர் சாள்ஸ் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

இலங்கையின் 50வது சுதந்திரதின கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு வருகை தரவுள்ள பிரிட்டிஸ் இளவரசர் சாள்ஸ் இலங்கை மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என இலங்கை தேசிய கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

பகிரங்க மன்னிப்பு கோரா விட்டால் இளவரசருக்கு தமது எதிர்ப்பை காட்டப்போவதாகவும் இக்குழு அறிவித்துள்ளது.

19ம் நூற்றாண்டு மக்கள் புரட்சியை பிரித்தானிய இராணுவம் அடக்கிய சம்பவத்திற்கு அந்த அரசாங்கத்தின் சார்பில் இளவரசர் சாள்ஸ் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத போக்குடைய தேசிய கூட்டுக்குழுவின் செயலாளர் பியசேன குணசேனா அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

கண்டியில் நடைபெற இருக்கும் சுதந்திரதினவிழாவில் இளவரசர் சாள்ஸ் கலந்து கொள்வார் என அறிவிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு கண்டிப்பிரதேசத்தில் இப்பொழுதே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.


### படைப்பாளிகளே.......!

தினக்கதிர் வார வெளியீட்டிற்கு தங்களிடமிருந்து தரமான படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், இலக்கியவிமர்சனங்கள். மற்றும் தொடர்கதைகள் போன்றவற்றை எழுதுங்கள்.

எழுதியதை தினக்கதிருக்கு அனுப்புங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண்

### அன்பான வாசகர்களே!

நெற்றிக்கண் உங்கள் பகுதி. நீங்கள் வாழும் பிரதேசத்தில் நிலவும் பொதுவான பிரச்சனைகளை நீங்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பலாம். பிரச்சனைகளை பிரதிபலிக்கும் புகைப்படங்களும் வாரவேற்கப்படுகிறது.

இப்பகுதி மக்கள் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சனைகளை வெளிப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களின் கண்களையாவது திறக்கவேண்டும் என்ற நோக்கினைக் கொண்டது. யாரையாவது புண்படுத்துவதற்காக அல்ல.

அத்தோடு அரசஊழியர்கள், பொதுமக்கள் அரச நிறுவன மட்டத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை எழுதி அனுப்பினால் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருடன் தொடர்பு கொண்டு உரிய பதிலையும் பிரசுரிப்போம்.

மொட்டைக்கடிதங்கள், முகவரி குறிப்பிடாத கடிதங்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படாட்டாது. சொந்தப் பெயர் முகவரியுடன் எமக்கு எழுதி புனைபெயரில் பிரசுரிக்குமாறு கேட்டால் அது ஏற்கப்படும்.

கீழேஉள்ள முகவரியை வெட்டி ஒட்டாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பிரதம ஆசிரியர்
தினக்கதிர்

நெற்றிக்கண்
தினக்கதிர்.
த.பெ.இல.06,
மட்டக்களப்பு.

## மட்டுநகர் வீதிகள் சிதைக்கப்படுகின்றன

தொலைத்தொடர்பு தரைக்கீழ் கேபிள் துளை அமைப்பதற்காக மட்டக்களப்பு நகரில் வீதிகள் வெட்டப்பட்டு வருகின்றன. சீராக மூடப்பட்டு செப்பனிடப்படாததால் வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுவதால் பாதசாரிகளும், பொதுமக்களும் பலத்த துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

சகல வீதிகளுக்கும் பொறுப்பான அரச திணைக்களங்களுக்கு உரிய நிதி வழங்கியுள்ளோம். செப்பனிடுவதற்கு அவர்களே பொறுப்பு என்று தரைக் கீழ் கேபிள்களை மேற்கொள்ளும் தனியார் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்திக்கு பொறுப்பான திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது "வெட்டப்படும் வீதிகளை செப்பனிட நிதி ஒதுக்கீடு கிடைத்தது. ஆனால் முழுமையாக தரைக்கீழ் கேபிள்கள் இணைக்கப்பட்டு இயங்கக் கூடிய நிலமை வந்த பின் ஸ்ரீலங்கா ரெலிகொம் பச்சைக்கொடி காட்டிய பின்பே வீதிகளைச் செப்பனிட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அதற்கு முன்னர் எந்த இடத்திலும் மீண்டும் குழி வெட்ட வேண்டி ஏற்படலாமென்பதற்காகவே" என்றார்.

எனினும் வீதிகள் பருவ மழை காத்தில் ஆங்காங்கே வெட்டப்பட்டுள்ளதால் சிரமங்களை அனுபவிப்பது பொதுமக்களே.

பல மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு கடந்த டிசம்பருக்குள் முடிக்க வேண்டிய திட்டம் இறுதி நேரத்தில் முண்டியடித்தும் முடியவில்லை.

திட்டங்களை அவசர அவசரமாக முடிப்பதால் நன்மை அடைவது பொதுமக்களல்ல.

விரைவில் வீதிக் குழிகளை மூடி பாதசாரிகள் நலன்களைப் பேண சம்பந்தப்பட்டவர்கள் உதவவேண்டும்.

என்.சிந்துஜா

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளும் பாடசாலைகளும்

அரசாங்க பாடசாலைகள் முதலாம் தவணைக்காக கடந்த திங்கள் திறக்கப்பட்டன. எனினும் பல ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் சமூகமளிக்காதலால் வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறவில்லையென்று பெற்றோர் விசனம் தெரிவிக்கிறார்கள்.

மாவட்ட ஆசிரியர் வளத்தில் கால் பங்கு ஆசிரியர்கள் க.பொ.த.சாதாரண பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதே இதற்கு காரணமாகும். நகரப் பாடசாலைகளில் அதிகளவு ஆசிரியர்கள் சென்றிருப்பதால் பெயரளவிலேயே இயங்குகின்றன.

ஒவ்வொரு வருடமும் க.பொ.த.சாதாரண, உயர்தர பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பிடும் காலத்தில் நாடெங்குமுள்ள பாடசாலைகளில் இந்த நிலையே நிலவிவருகிறது.

இதனால் வாரக்கணக்கில் பாடசாலை செல்லும் மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை உள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சு இவ்விடயத்தை கண்டும் காணததுபோல சமாளிக்க கூடாது.

மாணவர்களின் கற்றல் நோக்கங்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறது. பாடசாலை விடுமுறை நாட்களுக்குள் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை பூர்த்தி செய்யக்கூடியதாக திட்டமிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாணவனோ, மாணவியோ பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே பாடசாலைக்கு செல்கிறார்கள். எனவே ஒவ்வொருநாளும் கற்பித்தல் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஏ.ஜே. மூர்த்தி
வாழைச்சேனை



**தாழ் திறவாயோ**

நோராட் உதவியுடன் வந்தாறுமூலையில் நிர்மாணிக்கப்பட்ட நெசவு பயிற்சி நிலைய கட்டிடத்தையே படத்தில் காண்கிறீர்கள். 1996ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இந் நிலையம் இன்றும் திறக்கப்படவேயில்லை.
(படப்பிடிப்பு : வந்தாறுமூலை நிருபர்)

## மட்டக்களப்பு வங்கிக்கு கல்முனையில் சட்டத்தரணி!

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை வங்கி கிளைகளில் காணியை அடமானம் வைத்து கடன் பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

மட்டக்களப்பு சட்ட ஆலோசகராக கல்முனையைச் சேர்ந்த சட்டத்தரணியொருவர் நியமிக்கப்பட்டிருப்பதால் அலையவேண்டியுள்ளது. 25 கிலோ மீற்றர் பிரயாணம் செய்து கல்முனையை அடைந்தால் சிலவேளைகளில் குறித்த சட்டத்தரணியை சந்திக்க முடியாது திரும்பவேண்டியுள்ளது. 1995ம் ஆண்டு வரை மட்டக்களப்பு நகரிலுள்ள சட்டத்தரணி ஒருவரே வங்கி சட்ட ஆலோசகராக கடமையாற்றி வந்தார்.

பின்னர் கல்முனையில் உள்ள சட்டத்தரணி நியமிக்கப்பட்டது. ஏன்னன்று தெரியாது வாடிக்கையாளர்கள் திணறுகிறார்கள்.

மட்டக்களப்பு நகரில் சிரேட்டசட்டத்தரணிகள் பலர் இருந்தும் கல்முனையிலுள்ள சட்டத்தரணியொருவர் நியமிக்கப்பட்டுள்ளது குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

வாடிக்கையாளர் நலன் கருதி இங்குள்ள ஒருவருக்கு நியமனம் வழங்குமாறு கேட்கிறார்கள்.

இதேவேளை இலங்கை வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க கிழக்கு மாகாண இலங்கை வங்கி அலுவலகத்தை கொழும்பு நகரிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு மாற்றவேண்டும்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பெயரளவில் சமுர்த்தி அமுலாக்கல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் ஜனவரியில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. பின்னர் படிப்படியாக வாகரை, வவுணதீவு, பட்டிப்பளை தவிர்ந்த ஒன்பது பிரதேச செயலகப் பிரிவுகளில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்கள் வழங்கப்பட்டது.

ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு இருவர் என்ற அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் 568 பேருக்கு 431 பேரே நியமிக்கப்பட்டனர். 137 ஊக்குவிப்பாளர்கள் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

இதைவிட மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தி திட்டம் எப்போது அமுலாகும் என்று கூட தெரியாத நிலையே உள்ளது.

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருவருடங்களாக அமுல்படுத்தப்பட்டு வரும் சமுர்த்தி திட்டம் இவ்வருடமாவது வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

சமுர்த்தி அமுல்படுத்த முன்பு கடந்த வருடம் பெப்ரவரியில் வறுமை நிவாரண உணவு முத்திரை நிறுத்தப்பட்டது. பலத்த பகிரதபிரயத்தனங்களுக்கு மத்தியில் கடந்த ஆகஸ்ட் முதல் 250 ரூபா முத்திரை வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் ஏனைய மாகாணங்களில் 500 ரூபா, 1000 ரூபா வரை நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதுடன் காப்புறுதி சேமிப்பு திட்டங்களும் அமுலில் உள்ளன. சமுர்த்தி வங்கி நிறுவப்பட்டு சுயதொழில் உதவிகள் வழங்கப்படுகின்றன.

அத்தோடு சமுர்த்தி அபிவிருத்தி திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யுத்தத்தை சாட்டாக வைத்து இரு வருடங்களாக மறுக்கப்பட்டே சமுர்த்தி இவ்வருடமாவது கிட்டுமா.

வி.சந்தரகுமார்
ஆரையம்பதி.

## மின்சாரம் கிடைக்குமா?

கிண்ணியா நகரத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ள பைசப் நகர், கண்டியடித்யூத்து, தாமரைவில் போன்ற கிராமங்கள் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தோற்றம் பெற்றனவாகும்.

மூதூர் தொகுதிக்குட்பட்ட இக்கிராமங்களுக்கு இதுவரை மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இக்கிராமங்கள் இருளிலேயே மூழ்கியிருக்கின்றன.

ஆகவே தற்போதைய திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் அப்துல் மஜீத் அவர்களாவது மேற்குறிப்பிட்ட கிராமவாசிகளின் நன்மை கருதி மின்சார வசதியை பெற உதவுவாரா?

ஏ.கே.ஏ.ஸவாகீர்
ஹிஜ்ரா வீதி,
கிண்ணியா 03

குறிப்பு:- தங்கள் கோரிக்கை மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது நூலகம்






அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச கலாச்சார பேரவையின் "ஏர்முனை" இலக்கிய விழா மலர் கிடைக்கப் பெற்றோம். அழகிய அச்சமைப்பில் 64 பக்கங்களில் மலர்ந்திருக்கும் இவ் இதழின் முகவுரையில் "நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலில் நிம்மதியற்ற வாழ்க்கைக்கு முகங்காட்டிக் கொண்டிருக்கும் சமூகத்தின் கலையும் கலாசார விழுமியங்களும் அழிந்து கொண்டு வருகின்றன. உள்ளப்பூரிப்பின் உவகையால் மலர்பவைதான் கலைகள். இத்தகைய ஒரு சூழல் இன்று இல்லாவிடினும் கலைகளைப் பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டாயம் எமக்கு இருக்கிறது." என்று எழுதுகிறார் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் எம். தயாபரன்.

ஆம் உலகம் இன்று கணனியுகத்தின் உச்சத்தில் கைகோர்த்துக் கொண்டு உலா வரும் போது நாம் எமது இருப்பையே தொலைத்தவர்களாக அதற்காக போராட வேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இன்னும் இன்னுமாய் எமது மண்ணின் மக்களின் வாழ்க்கை நிலை கோள்விக்குறியாகவே இருக்கிறது.

இந்நிலையில் தான் அண்மைக்காலமாக ஒரு மாற்றம். இதனை ஒரு வித எழுச்சி என்றே கூறலாம். பட்டன்களை தட்டி விட்டவுடன் முழு உலகையும் பார்க்கக் கூடிய வசதிகள் வந்த பின்பும் இன்று எமது கலைகளை, எமது கலாசாரத்தை எமது பாரம்பரியங்களை தேடி நாம் பயணிக்கிறோம். இது எமது அடையாளத்தை தேடும் முயற்சியாக, எமது வாழ்நிலைகளை பதிவுகளாக்கும் முயற்சியாக அமைந்து விடுவது வரவேற்கத்தக்கதே.

அந்த வகையில்தான் இந்த ஏர்முனை முக்கியம் பெறுகின்றது. ஆலையடி வேம்பு பிரதேசத்தின் கலைப்பாரம்பரியங்களை தேடும் முயற்சியில் அதனை அடையாளப்படுத்தும் முயற்சியால் ஏர்முனை தனது பங்களிப்பை செய்திருக்கிறது. "அக்கரைப்பற்று. ஆலையடிவேம்பு பிரதேச பண்பாட்டு வரலாறு" என்ற சி.சிவஞானமூர்த்தியின் கட்டுரை, ஆலையடி வேம்பு பிரதேசத்தின் பண்பாட்டு கோலங்களை ஆராய்கிறது. கருங் கொடித்தீவு என அழைக்கப்பட்ட சிற்றூர் புதிய நிர்வாக பிரிவுகளுக்காக ஆலையடி வேம்பாக மாறியது பற்றியும் அதன் பூர்வீக குடிகள் பற்றியும் அவர்களின் கலாசார பண்பாடு பற்றியும் ஆராய்கிறது.

கடந்த கால கலவரங்கள் வடகிழக்கில் எந்த மண்ணையும் விட்டு வைக்கவில்லை. அதன் அகோர பசிக்கு குறிப்பாக தமிழ் கிராமங்களே அதிகம் உணவாகியுள்ளது. அந்த வகையில் ஆலையடி வேம்பு பிரதேசமும் அதன் அகோர பசிக்கு இரையாகியது. இதனால் இங்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிதேவையாகியது. இதனையே "ஆலையடி வேம்பு அபிவிருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு" என்று தலைப்பில் ச.செந்துராசா ஆராய்ந்துள்ளார்.

கவிஞர் க. வடிவேலின் "அக்கரைப்பற்றில் நாட்டுக்கூத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற கட்டுரை இன்று அருகிக் கொண்டு வரும் நாட்டுக்கூத்து கலைபற்றி கூறுகிறது. இன்றைய காலகட்டத்தில் மறைந்து வரும் தமிழர் கலைகளுக்குள் நாட்டுக்கூத்தும் முக்கியம் பெறுகின்றது. எமது கண்முன்னாலேயே அந்த கலை வடிவம் அழிந்து கொண்டிருக்கிறது. இதனை மீண்டும் புனரமைக்க இளைஞர்களை அழைக்கிறார் கவிஞர்.

என்.மணிவாசகனின் மரபுக்கவிதையும் ச.புவனேந்திரனின் புதுக்கவிதையும் பரிசுக் கவிதைகள் என்ற முத்திரையோடு பிரசுரிக்கப்பட்டிருந் தாலும் அவை ஏமாற்றத்தையே தருகின்றன.

நா.நவநாயகமூர்த்தியின் ஆலையடி வேம்பு பிரதேச வரலாற்றுப்பின்னனியை பல் தரவுகளுடனும், தகவல்களுடனும் தருகிறது. இது வரலாற்றுத்துறை மாணவனுக்கு பெரிதும் உதவக் கூடிய கட்டுரையாகும்.

ஆதினியின் "கனவுகளைக் காதலித்து" என்ற சிறுகதையொன்றும் பிரசுரமாகியுள்ளது. சமகால நிகழ்வுகளை வைத்து அழகாக எழுதியுள்ளார். 90 கலவரத்தில் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட தனது மகன் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் கோயில் கோயிலாக ஏறி இறங்கும் சிவமணி ரீச்சரைப் போன்று இன்று எத்தனை தாய்மார்கள் இந்த மண்ணில் வாழ்கிறார்கள். அவர்களது சோகமும் வேதனையும் இந்த வெறியர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது.

ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தினால் கௌரவிக்கப்பட்ட ஏழு கலைஞர்கள் பற்றிய விபரங்களும் அவர்களது சாதனைகளும் இடம் பெற்றுள்ளது.

தமிழ் அன்னைக்கு விழா எடுத்து சிறப்பு மலர் வெளியிட்டுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்திலிருந்து இன்னும் இன்னுமாய் மலர் வெளிவர வாழ்த்துகிறோம்.

**நமது நூலகம் பகுதிக்கு தங்களிடமிருந்து இலக்கிய செய்திகள், குறிப்புக்கள், விமர்சனங்கள், எதிர்பார்க் கப்படுகின்றன. தங்கள் வெளியீடுகள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற விரும்பின் வெளியீடுகளை எமக்கு அனுப்பிவையுங்கள்.**

**– தயாரிப்பாளர் –**

தொகையினர் இங்கு உள்ளனர். அவர்கள் அனைவரும் உங்கள் மீழ் வருகைக்காக காத்திருக்கின்றனர். வருவீர்களா?

## இலக்கிய அமைப்புக்களுக்கு என்ன நடந்தது

மட்டுநகரில் இலக்கிய அமைப்புகளுக்கு என்ன நடந்தது என கேட்கத் தோன்றுகிறது. மருந்துக்கும் ஒரு இலக்கிய கூட்டம் நடப்பதாக இல்லை. இத்தனைக்கும் இலக்கிய அமைப்புக்களின் பெயர்ப்பட்டியல் இங்கு நீளமாக இருக்கிறது.

90களின் ஆரம்பங்களில் இலக்கிய கூட்டங்கள் மெல்ல ஆரம்பித்தன. இதனை முன்னின்று ஆரம்பித் பெருமை மட்டக்களப்பு களைகட்டியது என்றே கூற வேண்டும். வாசகர் வட்டத்தின் அணுகுமுறைக்கு மாறுபட்ட நிலையில் செயற்பட்ட கலை இலக்கியப் பேரவை நேரடியான விமர்சனங்களில் இறங்கியது.

தொடர்ந்து விபுலம் அமைப்பு, விழுதுகள் அமைப்பு என வளர்ந்து சற்றுப் பிந்தி பூவரசுகள் அமைப்பும் உதயமாகியது. 90களில் வாசகர் வட்டத்துடன் அரும்பி அவ்வப்

### இலக்கிய நிரல்

**- தூயவன் -**

வாசகர் வட்டத்தையே சாரும். அப்போது செயற்பாட்டு நிலையில் வேறு எந்த இலக்கிய அமைப்பும் இருந்ததாக ஞாபகம் இல்லை. இருந்தும் தன்னந்தனியாக வாசகர் வட்டம் துணிந்து செயற்பட்டு வந்தது. அவர்களின் கருத்தரங்குகளின் உள்ளடக்கம் எவ்வாறு இருந்த போதும், எதுவுமே நடைபெறாதிருந்த 90 களின் ஆரம்பங்களில் மட்டு நகரில் இலக்கிய வழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பங்காற்றின என்பதை மறுக்க முடியாது.

பின்னர் வசகர் வட்டத்துடன் கூடவே கலை இலக்கிய பேரவையின் அதிரடி பிரவேசம் நிகழ்ந்தது. சற்றுத் தீவிரமாக செயற்பட்ட கலை இலக்கியப் போது ஒரு இலக்கியக் கூட்டம் என்ற நிலையில் இருந்து, பின்னர் இலக்கிய அமைப்புகள் அதிகரிக்க, வாரத்துக்கு ஒரு கூட்டம் என்றாகி, ஒரு கட்டத்தில் ஒரே தினத்தில் இரண்டு மூன்று கூட்டங்கள் நடந்து, இலக்கிய அன்பர்கள் எந்தக் கூட்டத்துக்குப் போவது என்று திண்டாடும் நிலை கூடத் தோன்றியது. ஆனால் இன்று நிலமை தலைகீழாக மாறியுள்ளது. மெல்ல மெல்ல இலக்கிய கருத்தரங்குகள் குறைந்து வந்து, 97 இன் பின் அரைப்பகுதி எந்தவொரு நிகழ்வுமே இடம் பெறாது கழிந்துள்ளது. இலக்கிய அன்பர்கள் ஒரு கூட்டம் நடக்காதா என ஏங்கும் நிலைதான் காணப் படுகிறது.

வேகம் காட்டியதோ அதே வேகத்தில் ஓய்ந்தும் போயிற்று. அதே போலவே கொஞ்சக் காலம் பூத்துக் குலுங்கிய பூவரசுகளும் விரைவிலேயே இலையுதிர் காலம் ஆரம்பித்து விட்டது. விழுதுகள் தங்கள் முதல் கூட்டத்துடன் விழுந்தவர்கள் தான். பிறகு எழுந்திருக்கவேயில்லை. விபுலத்தின் செயற்பாட்டிற்கும் கால இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆக வாசகர் வட்டம் ஒன்று தான் நம்பிக்கைக்கு உரியதாக இருந்தது. ஆனால் அவர்களின் செய்றபாட்டைக் கூட கடந்த பல மாதமாக காணாதிருப்பது கவலை தருகிறது. இலக்கிய கூட்டங்கள் அது என்ன கோணத்தில் நடந்தாலும் -இலக்கி யத்தோடு தொடர்புபட்ட சகலரையும் ஒருவித செயலூக்க நிலையில் வைத்திருக்க உதவு கிறது என்பதில் ஐயமில்லை. இலக்கியவாதிகள் பரஸ்பரம் தொடர்புகளை பேணவும், புதிய அறிமுகங்களைப்பொறவும், நட்பை வளர்க்கவும் இது பெரிதும் உதவுகிறது என்பதோடு மட்டுமல்ல எழுத்தாளர்கள் கவிஞர்களை நேரில் அறிமுகம் கொள்வதால் அத்தகையோர் பற்றி மனதில் கொண்டுள்ள போலி மாயைகளையும் போக்குவதற்கும் பெரிதும் உதவுகிறது. இன்னும் சொன்னால் இக்கூட்டங்களில் நேருக்கு நேர் கருத்துப் பரிமாறப்படுவதால், பலரின் ஆற்றல் வெளித்தெரிய வருவதோடு காட்டி விடுகிறது./ இலக்கிய உலகுக்கு புதிதாக வருவோரின் தயக்க மயக்கங்களை தெரிவிக்கும் களமாகவும் இலக்கிய கூட்டங்கள் அமைந்து வருகின்றன.

எனவே இலக்கிய அமைப்புக்கள் தமது நீண்ட நாள் உறக்கத்தைக் கலைத்து உற்சாகத்துடன் செயற்பட முன்வர வேண்டும். அதிகம் தேவையில்லை: ஏதேனும் ஒரு அமைப்பேனும் விடாப்பிடியாக சற்று உறுதியுடன் நிகழ்ச்சிகளை நடத்தினால் அதுவே போதும்.

இலக்கிய கூட்டங்களுக்கு வருவோர் கணிசமான

> **இதயத்தில் இருந்து**
> "தினக்கதிர்" தொடர்பான உங்கள் கருத்துக்களையும். விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எமக்கு எழுதுங்கள்.

### முதல் சந்திப்பு

நீங்கள் நேசித்த எழுத்தாளரை கலைஞரை முதல் முதலாக சந்தித்த அனுபவங்களை இப்பகுதியில் பகிர்ந்து கொள்ளலாம். உங்களால் மறக்க முடியாத அந்த நினைவுகளை எமது இலக்கிய நெஞ்சங்களுடன் மீட்டிப் பார்க்கலாமே...........

*அனுப்ப வேண்டிய முகவரி*

முதல் சந்திப்பு,
ஆசிரியர்,
தினக்கதிர்,
த.பெ.இல.06,
மட்டக்களப்பு.

### படைப்பாளிகளே......!

தினக்கதிர் வார வெளியீட்டிற்கு தங்களிடமிருந்து தரமான படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், இலக்கிய விமர்சனங்கள், மற்றும் தொடர்கதைகள், போன்றவற்றை எழுதுங்கள்

எழுதியதை தினக்கதிருக்கு தபாலிடுங்கள்.

## மட்டு. வைத்தியசாலை காசோலை மோசடி சந்தேக நபர்களுக்கு பிணை

மட்டக்களப்பு பொது வைத்தியசாலை காசோலை மோசடி தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவருக்கும் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே.விஸ்வநாதன் பிணை வழங்கினார்.

தலா ரூபா 25 ஆயிரம் ரொக்க பிணையிலும் 4லட்சம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிபதி சரீரப்பிணை எடுப்பவர் அரச ஊழியராக இருக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையை சேர்ந்த கோபிகிருஷ்ணா மற்றும் ந.றோகன ஆகிய இருவரும் அரசாங்கத்திற்கு சொந்தமான 3,62,702 ரூபா 15 சதத்தை மோசடி செய்ததாக குற்றம் காட்டப்பட்டுள்ளது.

அடுத்த தவணை பெப்ரவரி 11ந் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1997 நாட் குறிப்பிலிருந்து.

யூலை - 01 பேசாலையில் "மிஷன்" கப்பல் குண்டு வைத்து தகர்ப்பு.
யூலை - 05 திருமலை மாவட்ட த.வி.கூட்டணி எம்.பி.திரு.அ.தங்கத்துரை உட்பட நான்கு பேர் சுட்டுக்கொலை. 15 பேர் காயம்.
யூலை - 08 "மோறங் பொங்" வடகொரியக் கப்பல் 38 மாலுமிகளுடன் புலிகளால் கடத்தல்.
யூலை - 10 திராயகேணி கிராமோதயத்தலைவர் மைலிப்போடி சுட்டுக்கொலை.
யூலை - 11 தோப்பூர் காவலரன் மீது தாக்குதல். இரு பொலிஸார் பலி. இச்சம்பவத்தில் 5 பொதுமக்களும பலி.
யூலை 13 வடகொரியக்கப்பல் மாலுமிகள் 37 பேரும் புலிகளால் விடுதலை.
மட/ மாவட்ட இராணுவப்படைப்பிரிவு அலுவலகம் மீது ஷெல்வீச்சு இருவர் காயம்.
யூலை 14 மட்/மாநகர சபை உறுப்பினர் பிரபாகரன், மனைவி, மகன் மற்று மூவருக்கு கத்தி வெட்டு. மகனும மற்றொருவரும் பலி.
யூலை -15 வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பகுதியில் படையினர் மீது தாக்குதல். மூன்று பேர் பலி. எதிர்தாக்குதலில் 105 வீடுகள் சேதம்.
யூலை - 16 நெடுங்கேணியில் மோதல். 16 ராணுவம் பலி.
யூலை - 17 அக்கராயன்குளம் நோக்கி பலத்த ஷெல்லடி. ஒரே குடும்ப உறுப்பினர் உட்பட 4 பேர் பலி. 6 பேர் காயம்.
யூலை - 20 திருமலை மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. எம்.ஈ.எச்.மஹ்ரூப் உட்பட 5 பேர் சுட்டுக்கொலை.
யூலை - 25 மூத்த பத்திரிகையாளர் பொன்.ராஜகோபால் மரணம்.
ஆகஸ்ட் - 01 சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை ராணுவ முகாம்கள் மீது ஷெல்வீச்சு. 2 ராணுவம் பலி. இருவர் காயம்.
ஆகஸ்ட் - 11 மட்/விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் உண்ணாவிரதம்.
ஆகஸ்ட் - 14 முல்லைக்கடலில் கடற்படை - புலிகள் மோதல். கடற்படை "டோரா" கப்பல் சேதம்.
ஆகஸ்ட் - 18 வடபகுதிக்கு கப்பற்சேவையை நடத்தக்கோரி 750 பேர் திருமலையில் உண்ணாவிரதம்.
ஆகஸ்ட் - 24 மடடுநகர் ராணுவ முகாம் மீது புலிகள் எறிகணைத்தாக்குதல். இரு ராணுவம், இரு பொதுமக்கள் பலி. 39 பேர் காயம்.
செப்டம்பர் - 01 பிரிட்டிஸ் இளவரசி டயானா கார் விபத்தில் மரணம்.
மட்டக்களப்பில் விஷச்சாராயம் குடித்து 50 பேர் பலி. 150 பேர் வைத்தியசாலைகளில் அனுமதி.
செப்டம்பர் - 09 புல்மோட்டையில் சீனக் கப்பல் மீது தாக்குதல். 7 பேர் பலி.
செப்டம்பர் - 10 முன்னாள் சபாநாயகர் பாக்கீம் மாக்கர் மரணம்.
செப்டம்பர் - 11 ஈ.பி.டி.பி. கொழும்பு அலுவலகத்தில் குண்டு வெடிப்பு. ஒருவர் பலி.
செப்டம்பர் - 12 சங்கமக்கண்டியில் அதிரடிப்படை மீது தாக்குதல். 7 பேர் பலி.
ஒக்டோபர் - 05 ஒட்டுசுட்டான் பகுதியில் பெரும் சண்டை. 36 படையினர் பலி. 93 பேர் காயம். பெல்ரக, எம்.ஐ.24 ரக ஹெலிகள் இரண்டு சேதம்.
ஒக்டோபர் - 90 விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா தடை.
ஒக்டோபர் - 13 புளொட் வவுனியாவில் கர்த்தால் செம்மண்தீவில் மோதல். 4 ராணுவம் பலி. 14 பேர் காயம்.
ஒக்டோபர் - 14 மட்டு ராணுவ, விமான, கடற்படை தளங்கள் மீது விடுதலைப்புலிகள் எறிகணைத்தாக்குதல். கச்சேரி கட்டிடம் சேதம். 16 ராணுவம் காயம்.
ஒக்டோபர் - 15 கொழும்பு கலதாரி ஹொட்டலில் குண்டு வெடிப்பு.
ஒக்டோபர் - 24 அரசியலமைப்பு தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு.
ஒக்டோபர் - 27 பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ் பகிடிவதை காரணமாக மரணம்.
நவம்பர் - 07 அமெரிக்காவின் தடையை எதிர்த்து விடுதலைப்புலிகள் அமெரிக்க சமஷ்ரிமேன் நீதிமன்றில் மனுதாக்குதல்.
நவம்பர் - 10 எம்.ஐ.24 ஹெலி கொக்கிளாய் கடலில் விழுந்தது. 2 விமானிகள் பலி.
நவம்பர் - 24 மட்டக்களப்பு மாவட்டத்தில் 73 கோடி 83 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுள்ளதாக அரசாங்க அதிபர் அ.கி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.
நவம்பர் - 14 களனி திஸ்ஸ மின் நிலையத்தில் குண்டு வெடிப்பு. 3 எண்ணைத்தாங்கிகள் சேதம்.
நவம்பர் - 17 புலிகளைத் தேடி மட்டுநகர் பாடசாலைகளில் தேடுதல். 10000 மேற்பட்ட மாணவர்கள் விசாரணை.
நவம்பர் - 24 காவலூரில் ஈ.பி.டி.பி. படைவீரர் மோதல்.
நவம்பர் - 25 நயினாமடுப் பகுதியில் பெல் 212ரக ஹெலி விழுந்தது. இரு விமானிகள், இரு படையினர் பலி.
நவம்பர் - 27 மகசீன் தமிழ் கைதிகள் 223 பேர் சாகும்வரை உண்ணாவிரதம்.
டிசம்பர் - 09 மட்டக்களப்பு சந்தை வளவில் மர்மக்குண்டு வெடிப்பு. 5 பொதுமக்கள் பலி. 24 பெண்கள் உட்பட 59 பேர் காயம்.
டிசம்பர் - 11 மட்டுநகரின் மணிக்கூட்டுக்கோபுரச் சந்தியில் முச்சக்கர வண்டி குண்டு வெடிப்பு. சாரதி உட்பட இருவர் பலி.
களுத்துறை சிறையில் சிங்களக் கைதிகள் மூன்று தமிழ் அரசியல் கைதிகளை வெட்டிக் கொன்றனர்.
டிசம்பர் - 29 அம்பாறை. ஹாடிக்கல்லூரி மாணவன் பகிடிவதையால் மரணம்.

## "அடகு வைக்கப்பட்ட தேசத்தில்......"

எண்ணுங்கள் -
எத்தனை உயிர்கள்
இந்த மண்ணில்
பறிக்கப்பட்டனவென்று -
இது
அழுக்கு நோட்டுக்களை
வங்கிக்கணக்குகளில்
சலவை நோட்டுக்களாக்கும்
அரசியலுக்கும் சபிக்கப்பட்ட நம்
தேசத்துக்கும் தெரியாத கணக்கு

பறித்தவனையல்ல
கொடுத்தவனைக்கேள் -

வெட்டுண்ட தாயின் மார்பில்
போராடித்தோற்று
விரல் சூப்பும்
மழலையின்
அழுக்குக் கண்ணீரின்
உப்பு வரிகளில்
வரையப்பட்டிருக்கும்
சரியான கணக்கு
இவர்களெல்லாம்
மண்ணில்
புதையுண்டவர்களல்ல
விதையுண்டவர்கள் -

தேவகுமாரனைப்போல்
மூன்று நாட்களிலல்ல
ஆனாலொருநாள்முளைத்தெழுவார்கள்.
இட்ட முதலுக்குத் தேசத்திடம்
வட்டி வசூலிக்க -

அப்போது தேசமோ
அநேகமாக
இன்னொரு தேசத்துக்கு
அடகு வைக்கப்பட்டிருக்கும்..

அ.ச. பாய்வா

## என்ன?

எத்தனை இதழ் வந்தென்ன?
எதைஎவர் எழுதியென்ன?
அத்தனையுங் கற்றென்ன?
அவைதனில் பரப்பியென்ன?
முத்தரப்புடன் படிக்கை
முடித்தென்ன - அழித்துமென்ன?




இத்தரை உய்யுமாமோ?
இனவாதம் மறையுமாமோ?

பறித்தவை பேசியென்ன?
பழையோரை ஏசியென்ன?
அறிவோடுவாழ்ந்துமென்ன?
ஆழமாய்ச் சிந்தித்தென்ன?
நெறியோடு நின்றுமென்ன?
நீதி - மெய் பார்த்துமென்ன?
வெறிமதம் வீழுமாமோ?
வெளி உலகுதவு மாமோ?

கோலது நிமிர்ந்தாலன்றி,
குடிமக்கள் விழித்தாலன்றி,
வால்பிடி நின்றாலன்றி,
வருபடை போனாலன்றி,
நாலுநாடசைந்தாலன்றி,
நல்லெண்ணம் வந்தாலன்றி
ஆளையாள் தின்பதேதான்!
ஆண்டெலாம் தொடர்வதேதான்!

அடக்குதல் மனிதம் அன்று!
ஆரையும் ஆரும் தேய்த்து
ஒடுக்குதல் மனிதம் அன்று!
ஒருவரை ஒருவர் ஏய்த்து
மடக்குதல் மனிதம் அன்று!
மனிதரை மனிதர் போன்று
நடக்க வைப்பதுவே நீதி!
நடக்குமா - நம்பலாமா?

தாமரைத்தீவான்

## பொறுத்திரு

மகனே,
உன் சிந்தனை ஊற்றுகளை
சிறைப்படுத்து
உணர்ச்சி வேகத்தை
ஒளித்து வை
வீர வார்த்தைகளை
வெளிவிடாதே

கற்பனைச் சிறகுகளையும்
கண்டு பிடித்து
காயப்படுத்தும்
துப்பாக்கி ரவைகள்
இங்கு காற்றாக வீசும்
காலமிது
பொறுத்துக்கொள்

மனிதம் தொலைக்கப்பட்ட
வருடங்களின் தொடர்ச்சி
இன்னும் முடியவில்லை
சமாதானப்பறவை
என்றால் என்ன?
என்று கேட்கும்
சாதிசனங்கள் இருக்கும் வரை
புனிதம் என்ற மனிதம்
இப்பூமியில் பிழைக்காது
மகனே பொறுத்திரு

இயற்கை முடிவுதான்
எதுவெனப்பார்ப்போம்.

ஸ்னேகா

## வாழ்வு

காலங்கள் தோறும்
காத்திருப்புக்கள்
புதியதல்ல
ஆனால் காயங்களையே
காணிக்கையாக்கும்
இந்த அனுபவங்கள்
எதைச் சொல்லுகின்றன
வாழ்வின் மீதான
காதலையா!
இல்லை
மரணத்தின் மீதான
நேசிப்பையா?

மைதிலி

## காடு அழிக்கும் பணியில் பொதுமக்கள்

(நமது நிருபர்)

மட்/மாவட்டத்தில் விவசாயத்திணைக்களமும் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான அரச சார்பற்ற நிறுவனங்களும் மரங்களை வளர்ப்பதில் ஊக்கம் காட்டி வருகின்றனர்.

இதே வேளை பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் படையினர் வீதி ஓரங்களில் நிற்கும் மரங்களை, காடுகளை வெட்டி வீழ்த்துவதற்கு வலுக்கண்டிப்பாக வீதியால் செல்லும் பொதுமக்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

அவசர தேவைகளுக்காக செல்லும் மக்களும் படையினர் அறிவுறுத்தலால் குறிப்பிடப்பட்ட வேலையை செய்ய வேண்டியே உள்ளது.

இதேவேளை வீதி ஓரங்களில் பொறிவெடிகள், கிளமோர் கண்ணி வெடிகள் இருந்தால் காடுவெட்டும் பொதுமக்களின் கால்களையே பதம் பார்க்கும். எனவே இப்பணியில் பொதுமக்களை ஈடுபடுத்துவதை நிறுத்த அரசாங்க உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுப்பார்களா?

## தொழிற்சங்கம் அமைப்பு

கூட்டுறவு நிறுவன ஊழியர்களின் நலன்களையும் அவர்களது உரிமைகளையும் பேணுவதை குறிக்கோளாகக் கொண்டு திருகோணமலை மாவட்ட அனைத்து கூட்டுறவு ஊழியர்களையும் உள்ளடக்கியதாக கூட்டுறவாளர்கள் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்சங்க கூட்டம் அண்மையில் திருமலை மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் வட கிழக்கு மாகாண கூட்டுறவு அலுவலரும் தொழிற்சங்க தலைவருமான வே.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைவராக என்.சிவலிங்கம் செயலாளராக தி.ஹரிஸ்டன், பொருளாளராக திருமதி. திலகவதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இடம் பெயர்ந்தவர்களின் விபரம் திரட்டும் நோக்கம் என்ன?

(யாழ் நகரிலிருந்து நமது விசேட நிருபர்)

யாழ் மாவட்டத்தில் பதியபபட்ட நாலு லட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்களில் 2 லட்சத்துக்கு குறைவான வாக்காளர்களே தற்போது இங்கு தங்கியுள்ளனர்.

மிகுதி வாக்காளர்கள் இடம் பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் என கணிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்களின் வாக்குகளை நிரப்புபவர்களின் கையிலேயே வெற்றி தங்கியுள்ளது என தனது பெயரை குறிப்பிட விரும்பாத தமிழ் கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை தமிழ் கட்சி ஒன்று யாழ். குடா நாட்டில் இருப்பவர்கள் விபரம், இடம் பெயந்தவர்கள் விபரம் ஆகியனவற்றை திரட்டி வருகிறது.

இத்தகைய செயல்கள் தேர்தல் மோசடிகளுக்கு ஆரம்ப அறிகுறி என சொல்லப்படுகிறது.

இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் நடந்த தேர்தல்களில் பொதுமக்கள் ஈடுபாடு இன்றி ஒதுங்கி இருந்த நிலை இப்போதும் காணப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்திற்கு செல்பவர்களிடம் பொதுமக்கள் தமது அவலங்கள், கஸ்டங்களைத்தான் கூறுகிறார்கள். அரசியல், தேர்தல், பற்றி பொது மக்கள் வாயேதிறப்பதில்லை.

## ஷெல் வீச்சுடன் பிறந்த புதுவருடம்

வாழைச்சேனைப் பகுதியில் புது வருடம் பிறந்த நள்ளிரவன்று மேற்கொள்ளப்பட்ட "ஷெல்" மற்றும் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் பீதிக்குள்ளானார்கள்.

புதுவருடம் பிறக்கும் நள்ளிரவில் பா[illegible] துப்பாக்கி வேட்டுக்ளைத் தீர்த்து புதுவருடத்தை வரவேற்பது வழமை. ஆனால் இவ்வருடத்தில் துப்பாக்கி வேட்டுக்களைத் தவிர "ஷெல்" வீச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டதனால் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே [illegible] விட்டதோ என்ற அச்சத்தில் மக்கள் வீடுகளுக்குள் பாது காப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டனர். குடியிருப்புக்களுக்கு அண்மையில் "ஷெல்"கள் வந்து வீழ்ந்த போதிலும் எவருக்கும பாதிப்பு ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மட்டுநகரில் தினக்கதிர்
விநியோகஸ்தர்
கிசோனா றேடர்ஸ்
(பஸ் நிலையம் எதிரில்)
சென் அந்தனிஸ் றோட்
மட்டக்களப்பு
T.P- 065- 22082
065-23939


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் மூலம் ஒரு போதும் சமாதானம் கிட்டாது

(த.வேதநாயகம்)

"யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற வாதத்தை நிராகரிக்கின்றோம்"

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன் நீதி




யும் கௌரவமும் மிக்க சமாதானம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் தாமதம் இன்றி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

மேற்படி தீர்மானங்கள் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சமாதானப் பிரதிநிதிகளின் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்த இம்மாநாட்டிற்கு வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 1500க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கே.சத்தியநாதன் (ஆசிரியர்) இம்மாநாட்டில் உரையாற்றுகையில் சமாதானத்திற்காக யுத்தம் என்ற போர்வையில் எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அவலங்கள் ஏராளம். எமது பாடசாலைகள் மீதும் விமானங்கள் குண்டு போட்டன. அதில் மாணவர்கள் பலர் கொல்லப்பட்டனர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகள் ஓரே இடத்தில் குண்டு தாக்குதலில் பலியாகினர். எமது பிரதேசத்தை நோக்கி இராணுவம் முன்னேறிய போது நாம் காடுகளுக்குள் ஓடித் தப்பிக் கொண்டோம். ஆயிரக்கணக்கான மக்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். பனிரெண்டு பேர் இறந்தனர்.

மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசு இன்று சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் அதனைச் செயல்படுத்துவதில்லை. எமது இளைஞர்கள் இராணுவத்தில் சேருவது போராடுவதற்கு அல்ல. குடும்பத்துக்கு உணவு போடுவதற்காகவே அதில் சேர்கின்றார்கள். இவர்கள் இறந்து உடல் வீடடுக்கு கொண்டு வரும் வேளையில் சடலத்தை வைப்பதற்கு கூட வீட்டில் இடம் இருக்காது. இப்படியான ஏழைகளே யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது முழுச் சமூகமும் தான் என்றார்.

## சமாதானப் பிரதிநிதிகள் தீர்மானம்

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் கே.சிதம்பரநாதன் பேசுகையில் தமிழ் மக்களை மீட்பதற்கான யுத்தம் என்பதை நாம் முற்றிலும் மறுக்கிறோம். அரசினால் எம்மீது திட்டமிட்டு மேற்கொள்கின்ற யுத்தம் எந்த வகையிலும் தமிழ் இனத்தின் உரிமையைப் பெற்றுத் தராது.

தமிழ் மக்களின் தலைமை பேச்சுவார்த்தைக்கு வராது என்பது தவறானதாகும். சரியான பேச்சுவார்த்தை ஒன்றினை அரசு ஏற்படுத்துமானால் தமிழ் மக்களுக்காக போராடிக் கொண்டிருப்பவர்கள் அதில் கலந்து கொள்வார்கள். இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்கள் நாம் பிரிந்து செல்வதை விரும்பவில்லை என்பதை உணர்கின்றோம். நீங்களும் எங்களை உணருங்கள். எமது உரிமைகளைத்தான் நாம் கேட்கின்றோம். தமிழ் இனத்தை சரிநிகர் இனமாக நீங்கள் மனதில் நினைததால் இந்தப் பிரச்சனையை தீர்ப்பது கடினமில்லை என்றார்.

தேசிய சமாதானப் பேரவை அமைப்பாளர் அஜித ரூபசிங்க இராணுவத்திலிருந்து அங்கவீனமடைந்து ஓய்வு பெற்றவரான எச்.கே.தயாரெத்னா மாத்தளை பிரதேச சபை உறுப்பினர் முனிதாசகமகே ஆகியோரும் உரையாற்றினர்.

## சொன்னாலும் குற்றம்.

வாசக நேயர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பிறந்திருக்கும் புத்தாண்டு அல்லலுறும் எமது மக்களுக்கு விடிவை தர வேண்டும் என பிரார்த்திப்போம்!

கிழக்கில் வன்னியில், யாழ்குடாநாட்டில், புத்தளத்தில் என அகதிகளாக சொத்துக்களை இழந்து சோகங்களை மட்டுமே சொந்தமாக்கிக் கொண்ட எமது மக்களின் எதிர் காலம் கேள்விக் குறியான நிலையில் வழமை போலவே இந்த புத்தாண்டையும் சந்திக்கிறோம்.

அமைதி சமாதானம் பிறக்கும் என்ற நம்பிக்கைகளையும் உடைத் தெறியும் வகையில் துப்பாக்கி வேட்டுகளுடன் இந்த ஆண்டு மலர்ந்திருக்கிறது.

படையினர் தமது மகிழ்ச் சியை தெரிவிப்பதற்காக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

வாழைச்சேனையில் "ஷெல்" தாக்குதல்களையும மேற்கொண்டனர்.

நள்ளிரவு ஆராதனைக்கு சென்ற மக்களும், வீடுகளில் இருந்தவர்களும் படையினரின் "ஷெல்" அடி மகிழ்ச்சியால் பாதுகாப்பு இடங்களை தேடி ஓடவேண்டியதாயிற்று.

புத்தாண்டு பிறந்த வேளை பீதியுடன் ஓடிய ஓட்டம் என்று முடியுமோ....?

ஆனால் உலகில் மிகப் பெரிய செல்வந்த நாடான இலங்கையில் பிறந்திருக்கிறோம் என பெருமைப்படலாம்.

புத்தாண்டிறகு வாண வெடிகளைத்தான் கொழுத்துவார்கள்.

எந்த ஒரு நாட்டிலும் புத்தாண்டு மகிழ்ச்சியை தெரிவிக்க லட்சக்கணக்கான பெறுமதியுள்ள ஷெல்களையும் ரவைகளையும் செலவழிக்கமாட்டார்கள்.

ஆனால் இலங்கையில் மட்டும் தான் புத்தாண்டு மகிழ்ச்சியை தெரிவிக்க இப்படி ஒரு ஏற்பாடு.

"ஷெல்" அடித்து தமிழன் தலையில் விழுந்தால் அது இரட்டிப்பு மகிழ்ச்சி.

"பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிற வேதனை"

- ஆர்த்தி -

**பகீஸ்கரிக்கும்........**

வாக்குச் சாவடிக்கு வரும் ஒவ்வொரு வாக்காளரும் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்கப் படுவார்கள் என யாழ் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிக்குள் வாக்குப் பெட்டிக்கு அருகில் ஆயுதம் தரித்த பொலீசார் அமர்த்தப் படுவார்கள் என அவர் தெரிவித்திருக்கிறார்.

வாக்குப் பெட்டிக்கு அருகே ஆயும் தரித்த பொலிசாரை அனுமதிப்பது சுதந்திரமான வாக்களிப்புக்கு இடையூறாகும் என்று தேர்தல் அவதானிகள் கூறுகின்றனர்.

யாழ்.குடாநாடு வயோதிபர் இல்லம் போலவே காட்சியளிக்கிறது. இளம் வயதினர் மிகக் குறைவாகவே உள்ளனர்.

**யாழ்..............**

ளுக்கு செல்லமுடியாமல் உள்ளது. ஈ.பி.டி.பி ஆயுதபாணிகளாக இருந்து அங்கு ஏனைய கட்சிகள் செல்வதை தடுத்து வருகின்றனர்.

தேர்தல் நடந்து முடியும் வரையிலாவது துணைப்படையினரை யாழ் மாவட்டம் தவிர்ந்த வேறு மாவ்ட்டத்திற்கு மாற்ற வேண்டும். ஏனைய தமிழ் கட்சிகள் அங்கு பிரசாரம் செய்யக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்காத பொறுப்புள்ள தேர்தல் ஆணையாளரும் அரசும் ஏற்றுக் கொண்டு தீவுப்பகுதி தேர்தலை பின்போட வேண்டும் என அந்தக் கடிதத்தில் தெரிவக்கப்பட்டுள்ளது.

## தொடர்கதையாகும் ............

இவ்வாறு இன்றைய யுத்தமானது பெண்களுக்கு ஏற்படுத்துகின்ற துன்பமோ எண்ணிலடங்காதவையாகும். ஆனால் இவ்வாறு பாதிப்புற்ற பெண்கள் தக்க ஆதாரங்கள் இருந்தும் அவர்களுக்கெதிராக (வன்முறைகளுக்கெதிராக) நடவடிக்கை எடுக்க முடியாமலுள்ளமையே மிகவும் வேதனைக்குரியதாகும். வன்முறைகளை மேற்கொள்ளுவோரால் விடுவிக்கப்படும் மிரட்டல்களே இவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாமலுள்ளமைக்கு காரணமாகும்.

இவர்களின் மிரட்டல்களுக்கு பயந்து கோழைகளாக எமது பெண்கள் மாறியுள்ளமையே இவ்வன்முறைகள் மேலும் மேலும் வளர்வதற்கு காரணமாகும். இந்நிலையானது பரிகசிக்கத் தக்கதாகும்.

இந்நிலையில் பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதுடன், மிரட்டல்களுக்கு அடிபணியாது செயற்படுவதன் மூலமே இவ்வாறான வன்முறைகளை ஓரளவு தடுக்க முடியும்: என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்.

எனவே தான் எமது பெண்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வும், தற்துணிவும் எதையும் எதிர் கொள்ளும் மனப்பாங்குமே இன்றைய நிலையில் பெண்களின் ஆயுதங்களாகும். ஒவ்வோரு பெண்ணும் தனக்கிழைக்கப்படும் கொடுமைகளை வெளிக்கொணர்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இவர்களின் அநாகரிகங்கள் மூடிமறைக்கப்படாது வெளிக் கொணரப்பட்டு உரியவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதன் மூலமே பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கமுடியும்.

இவ்வாறு இல்லாத பட்சத்தில் வன்முறையாளர்களின் வன்முறைகள் மேலும் தொடர்ந்த வண்ணமே காணப்படும். எமது பயமும் கோழைத்தனமும், அடிபணியும் தன்மையுமே அவர்களின் செய்கைகளுக்கு தூண்டுகோலாக அமைகின்றன என்பது மறுக்கப்பட முடியாத அப்பட்டமான உண்மையாகும்.

எனவே ஒவ்வோரு பெண்ணும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். எமது விழிப்புணர்வே எமக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தும்.



மட்டக்களப்பு நாவலடியில் புதிதாக அமைக்கப்பட்ட தும்பு தொழிற்சாலையை மண்முனை வடக்கு பிரதேச் செயலாளர் செ.புண்ணியமூர்த்தி நாடாவை வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு - ஜெயா)

## ஒரு பிரஜைகள் நாடு......

பயம்.......
பயம்.............

அழுகையும் வந்தது.

இந்த இடம் போதுமான
பாதுகாப்பாக இல்லை என்று
கணேசன் நினைத்தான். வெளியில
போகேலாது அங்க கட்டாயம்
ஆமிக்காரன்கள் நிப்பாங்கள்.

'அப்ப என்ன செய்யலாம்?'
'இன்னும் கீழே ஆழத்துக்கு
போகவேணும்......'
'நல்ல ஆழத்துக்கு போகவேணும்.'
கணேசன் தன்னை சுதாகரித்துக்
கொண்டான். சின்னக் கைகளால்
மண்ணைத் தோண்ட
ஆரம்பித்தான். தலை கனத்தது.
கண் எரிந்தது. பசித்தது.
ஆனாலும் கணேசன் மண்ணை
தோண்டிக் கொண்டிருந்தான்.
அவன் தப்பியாக வேண்டும்.

சின்னக் கைகளில் மெல்ல
மெல்ல இரத்தம் கசிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்கதிர்
வார வெளியீடு
THINAKKATHIR WEEKLY
P.O.BOX - 06
16, St. Michael Street,
Batticaloa
Srilanka.
Phone: - 065 - 23055



அம்பாறை மத்திய முகாம் 4ம் கொலனியில் கடந்த வருடம் மே 11ந் திகதி கொலை செய்யப்பட்ட கோணேஸ்வரி கொலை வழக்கு விசாரணையில் சாட்சிகளாக அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் எஸ்.செல்வநாயகம் ஆகியோர் கல்முனை நீதிமன்றத்திற்கு வருகை தந்தபோது பிடிக்கப்பட்ட படம் ஜோசப் பரராசசிங்கம் எம்.பி, எஸ்.செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் படத்தில் காணப்படுபவர் கோணேஸ்வரியின் மகன் எஸ்.குகராஜன்.

# திருமலை நகரசபையில் அமளி துமளி

திருமலை நிருபர்

திருகோணமலை நகர சபைக் கூட்டம் பொலிஸாரைக் கொண்டு உறுப்பினர் ஒருவரை வெளியேற்றும் அளவிற்கு அமளி துமளியில் முடிந்திருக்கின்றது. ஈரோசைச் சேர்ந்த சி.நந்தகுமார் என்ற உறுப்பினரே இவ்வாறு வேளியேற்றப்பட்டவராவார்.

நகராட்சி மன்றம் டிசம்பர் மாதத்தில் மூன்று தடவைகள் கூட்டப்படாமல் வரவுசெலவுத் திட்ட அறிக்கையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இக் கூட்டங்களில் எதிரணி உறுப்பினர்கள் நகரசபைத் தலைவர் பக்கம் நின்று மேற்படி அறிக்கையை ஆதரிக்க ஆளும்கட்சி உறுப்பினர்கள் எதிராக நின்றதாலேயே பட்ஜட் நிறைவேறாமல் போனது. கடைசியாக 26ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் 29ம் திகதி அடுத்த கூட்டம் நடைபெறும் என்று தலைவர் அறிவித்திருக்கிறார். அதன்படியே 29ம் திகதி கூட்டம் நடைபெற்றிருக்கிறது. எதிரணி உற்ப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். இந்தக் கூட்டத்தில் இடைநடுவில் வந்த உபதலைவர் கா.லோகேஸ்வரனும் ஏனைய இரு ஆளும்கட்சி உறுப்பினர்களும் கூட்டம் கூட்டப்பட்ட முறை பிழையானது எனக் கூறி வெளியேறிவிட்டனர்.

எனினும் தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் எதிரணியின் உதவியுடன் பட்ஜட் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தின பிரச்சனையே கடைசியாக நடந்த கூட்டத்தில் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

கடந்த கூட்டறிக்கை வாசிக்கப்பட்டு சபை ஒப்புதலுக்காக விடப்பட்டபோது எதிரணி உறுப்பினர் ஒருவர் முன்மொழிந்து மற்றுமொருவர் வழிமொழிந்ததையடுத்து ஆளும்கட்சி உறுப்பினரான நந்தகுமார் அந்தக் கூட்டமே செல்லாது என்று முன்மொழிய ரவிராஜா என்ற உறுப்பினர் வழிமொழிந்ததையடுத்து சிக்கல் உருவானது.

வாக்கெடுப்புக்கு விடுங்கள் என்று நந்தகுமார் கூற உமது போக்கு பிழையானது என தலைவர் பதில் கூற நிலமை மோசமாகி சபையுள் ஆயுததாரிகளாக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நந்தகுமார் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினார்கள். வெளியேற்றப்பட்டவரது அணியினர் முறைப்படி 29ம் திகதி கூட்டத்திற்கு நாம் அழைக்கப்படவில்லை என்றும் தங்களில் சிலர் அன்று எதேச்சையாக அலுவலகம் வந்த போது கூட்டம் நடைபெறுவதைக் கண்டு உள்ளே நுழைந்து இவ்வாறு கூட்டம் நடத்துவது முறையல்ல என்று இடித்துரைத்துவிட்டு உடனேயே வெளியேறினார்கள் எனவும் கூறுவதுடன் எழுத்து மூல அறிவித்தலின்றி கூடிய கூட்டம் செல்லாது எனவும் வாதித்தனர்.

ஆனால் மறுதலைப்பிலோ 26ந் திகதி கூட்டத்தில் தலைவர் வாய்மூல அறிவித்தல் கொடுத்திருக்கிறார். அடுத்து வேலைநாளில் நடக்கவிருக்கும் எழுத்துமூல அறிவித்தல் தேவையற்றது. எனவே 29ம் திகதி இடம்பெற்ற கூட்டம் சரியானதே என்று கூறப்படுவதுடன் 26ந் திகதி கூட்டத்திற்கு இடைநடுவில் புகுந்து .வெளியேறியவர்களும் கையெழுத்திட்டு தமது வரவை உறுதிப்படுத்திய பிறகே வெளியேறினார்கள் எனவும் கூறப்படுகிறது.

# புலவர்மணி சகல அடக்கு முறைகளுக்கும் எதிராகப் போராடியவர் - கலாநிதி மௌனகுரு



கலாநிதி சி.மௌனகுரு

புலவர் மணி குறுகிய சிந்தனை நோக்கங்களுக்குள் செயற்பட்டவரல்ல. அவரது கவிதைகளை உரை நடைகளை, பேச்சுக்களை இன்றைய இளைய தலை முறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை நூற்றாண்டு ஆரம்ப விழாவில் நினைவு பேருரை நிகழ்த்திய கலாநிதி சி.மௌனகுரு தெரிவித்தார்.

மேலதிக அரசாங்க அதிபரும் மேற்படி நினைவு பணிமன்ற தலைவருமான சி.சண்முகம் விழாவுக்கு தலைமை தாங்கினார். இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஜீவானந்தஜி, வணபிதா பயஸ்பத்மராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

கலாநிதி சி.மௌனகுரு நிகழ்த்திய நினைவுப்பேருரையில் மேலும் தெரிவித்ததாவது:-

1878ல் மண்டூரில் பிறந்த அவர் சாதாரண பாடசாலைகளிலே கல்வி கற்றார். அவரிடம் மொழிப்பற்று இருந்தது. பிரதேசப்பற்று இருந்தது. நாட்டுப்பற்று இருந்தது. உலகப்பற்று இருந்தது. குறுகிய குறிக்கோள், குறுகிய நோக்கங்களுக்காக வாழ்ந்தவரல்ல. பரந்த விரிந்த நோக்கங்களுடன் செயற்பட்டார்.

அவருக்கு பல பட்டங்கள் தேடிவந்தன. பண்டிதர், புலவர்மணி, இந்துக்கலாச்சார திணைக்களத்தினால் இலக்கியச் செம்மல், யாழ் பல்கலைக்கழகம், இலக்கிய வித்தகர், இறுதியாக கிழக்கு பல்கலைக்கழகம் வழங்கிய பட்டம் இலக்கிய கலாநிதியாகும்.

புலவர் மணியிடம் கல்வித்தகமை இருந்தது. புதுக்கவிதை நடையிலும், மரபுவழிக்கவிதையிலும் தேர்ச்சிபெற்றார். பஹவத்கீதை வெண்பா பலராலும் பாராட்டத்தக்க ஒரு வெண்பாவாகும்.

ஓட்டமும், ஊற்றுக்களும் எனும் போது நதி ஊற்றில் இருந்து உற்பத்தியாகி ஓடுகிறது. நதியைப் பார்க்கிறோம். ஊற்றைப் பார்க்க முடியாது. நதி சரியாகப் பாய்ந்தால் வழங்கள் செழிக்க முடியும். அதே போல நம்முன் இருப்பது எழுத்துக்கள், சிந்தனை ஓட்டம் நிறைந்தது. புலவர்மணி அவர்களின் சிந்தனை ஊற்றுக்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தது. யாவராலும் புரிந்து கொள்ளக் கூடியது.

நான் அவரது மாணவன் என்ற ரீதியில் அவரது நூல்களை அறிவுரீதியாக ஆராய்ந்துள்ளேன். அவரது ஆளுமையும் சிந்தனையும் அவரது கவிதைக்கு தனித் தன்மையைக் கொடுத்தது. பஹவத்கீதை வெண்பா மிக இலகு தமிழ்மயப்படுத்தப்பட்டது,

அவரது 100க்கு மேற்பட்ட கட்டுரைகள் பதிப்பிக்கப்படாமல் உள்ளது. இலக்கிய உரைகள் விட்டுச்சென்ற விடயங்கள், கடிதங்கள் தொகுக்கப்பட வேண்டும்.

தமிழ் மொழிப்பற்று மிகுந்தவர் “காப்போம் எழுந்திருவீர் தமிழ் மொழியைக் காப்போம் எழுந்திருவீர்” “கற்றரிது கன்னித்தழை கற்றலரிது” என்ற பாடல்களிலிருந்து மொழிப்பற்று நன்கு புலனாகிறது.

இந்து மதத்தின் சாதிப் பாகுபாடு காரணமாக அதைவிட்டு கிறிஸ்தவ மதத்திற்கு போனார். ஆனாலும் அங்கு பாகுபாடு இருந்தது. பின் சைவசமயத்துக்கு அவர் திரும்பவில்லை. ராமகிருஷ்ண மிசனுக்கு சென்றார். நவீன உலகில் மக்களுக்கு உரிய முறையில் சமயக்கொள்கைகளைப் போதிப்பதில் ராமகிருஷ்ண மிசன் சிறப்பு வாய்ந்ததாகும்.

எனினும் கிறிஸ்தவ மதத்தில் ஒரு மென்மையான பற்று இருந்தது. ராமகிருஷ்ணமிசனில் சேர்ந்த பின் இந்து ஆலயங்களுக்கு சென்று வண்ணக்குமார்களின் ஆதிக்கத்திற்கு எதிராக போராடினார்.

புலவர்மணி அவர்களின் ஊற்றுகளை பிரித்து நூலாக இளம் சந்ததியினர் அறியக் கூடியவகையில் வெளிக்கொணர புலவர்மணி நினைவுப்பணிமன்றம் முன்வர வேண்டும் எனக்குறிப்பிட்டார்.



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஜீவானந்தஜீ, புளியந்தீவு பங்குத் தந்தை வண பிதா பயஸ் பத்மராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றுகிறார்கள்.

## புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நூற்றாண்டு ஆரம்ப விழா

மட்டக்களப்பு ஆனைப் பந்தி இராமகிருஷ்ணமிசன் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் ஜனவரி 8ந்திகதி வியாழக்கிழமை இவ்விழா நடைபெற்றது. புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணிமன்றம் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தது.



விழாவில் கலந்து கொண்ட சபையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் [illegible] அச்சகத்தில் 1998 ஜனவரி 11ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.